
# ஓயாத அலைகள்







## விடுதலைப்புலிகள்

குரல்: 71 ஆவணி - புரட்டாதி 1996 அன்பளிப்பு: 5/-



UNCEASING WAVES



## தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

புத் திட்டமாகும்.

சிலாவத்தையில் தரையிறங்கிய உதவிப் படை, தனது இலக்கை அடைய முடியாது கடல் வழியே பின் வாங்கிச் சென்றதுடன், பெரியளவிலான ஆள் - ஆயுத இழப்பையும் சந்தித்தது.

ஆபத்து நேரத்தில் படைத் தளங்களுக்கு உதவ முடியும் என்ற அரசின் பாதுகாப்புத் திட்டம், இதனால் கேள்விக்குறியாகி உள்ளது.

# மாறிவரும் கள யதார்த்தமும் சிங்கள அரசின் மமதையும்!

இதே வேளை -

புலிகளை வலுக்கட்டாயமாக மரபுவழிச் சண்டைக்கு இழுத்து-முடிந்தளவிற்கு அவர்களைக் கொல்லும் நோக்குடன் பாரிய இராணுவ நடவடிக்கைகளை நடாத்துவது என்பது, படையினரின் ஒரு தந்திரோபாயப் போர்முறையாகும்.

முல்லைத்தீவுத் தோல்வியை ஈடுகட்டுவதற்காகச் செயயப்பட்ட 'சத்ஜய' இராணுவ நடவடிக்கையின் பிரதான நோக்கங்களில் ஒன்று, பெரும் எண்ணிக்கையில் புலிகளைக் கொல்லுதல் என்பதுமாகும். இந்த நோக்கத்துடன், பெருந்தொகையான வெடிப்பொருட்களை அரசின் வான்படையும் தரைப்படையும், கண்மூடித்தனமான வகையில் பயன்படுத்தின. ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒரு தடவை என்ற ரீதியில் - 'கிபிர்' குண்டுவீச்சு விமானங்களின் தலைமையில் - அரசின் வான்படை விமானங்கள், கிளிநொச்சி - பரந்தன் பகுதிகளில் குண்டு மழை பொழிந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆயினும், பொருள் அழிவு - மக்களின் இடபெயர்வு - மக்களுக்குத் துன்பமிழைத்தல் - என்ற விடயங்களைத் தவிர, சிங்களப் படை விரும்பிய இராணுவ ஆசை ஈடேறவில்லை; அதேவேளை, 'சண்டைக்கிழுத்துக் கொல்லும்' உபாயத்துடன் வந்த படையினர் பெரும் இழப்பைச் சந்தித்ததுடன் - அவர்கள் எதிர்பார்த்ததற்கும் மாறாக - படை நகர்வும் பலத்த தடைகளைச் சந்தித்துவிட்டது!

'சுவரில் எறிந்த பந்துபோல' படையினரின் உபாயம் அமைந்துவிட்டமைக்குப் பிரதான காரணம், முல்லைத்தீவில் புலிகள் இயக்கம் பெற்ற மாபெரும் வெற்றியாகும்.

நேரடிச் சண்டைக்குப் புலிகளை இழுத்துவிட்டு அவர்கள் மீது பெருமெடுப்பில் படைக்கலச் சக்தியைப் பயன்படுத்தி அழித்தல் என்ற இராணுவப் பொது உபாயத்தை - ஒரு குறித்த அளவுவரை - எதிர்கொள்ளும் சக்தியை, முல்லைத்தீவு வெற்றி புலிகள் இயக்கத்திற்கு வழங்கியுள்ளது.

இதுகாரணமாக 'சண்டைக்கு இழுத்துச் சாகடித்தல்' என்ற சிங்களப் படைகளின் தந்திரோபாயப் போர்முறை, படையினருக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியதே என்ற உண்மையை, 'சத்ஜய' சண்டை படைத்தரப்பிற்கு உணர்த்தியுள்ளது.

# நுணுக்குக்காட்டி

"கிளிநொச்சியிலிருந்து வன்னியின் உட்பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து, பாம்புகள் நிறைந்த பற்றைகளுக்கு அருகில் குழந்தை குட்டிகளுடன் வெயிலிலும் மழையிலும் சோர்ந்து கிடந்த மக்களுக்கு உரிய நேரத்தில் நிவாரணங்களை அனுப்பாமல், அவர்களைத் தாண்டிக்குளம் ஊடாக வவுனியாவுக்கு இழுத்தெடுப்பதில் காண்பிக்கப்பட்ட அரசியல் நோக்கங்கொண்ட முனைப்பு, மனித நேயம் கொண்ட சகலரும் வெட்கித் தலைகுனியவேண்டிய விடயமாகும்."

- ஆசிரியர் தலையங்கம்
'வீரகேசரி' - 01. 09. 1996

---

"மனித உரிமைகளுக்கு அரசாங்கம் உன்னத ஸ்தானத்தை வழங்கியுள்ளதாக அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். மனித உரிமை மீறலில் பாதிக்கப்பட்ட ஒருவர் தனக்கு நீதி கிடைக்கவில்லை எனக் கருதினால் ஜெனிவா அல்லது நியூயோர்க்கிலுள்ள ஐ. நா. வின் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு முறையிட முடியுமாம்.

...ஆனால், ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலை போலவுள்ள யாழ். குடாநாட்டிலுள்ள மக்களால் இந்த உரிமைகளைப் பெறமுடியுமா? அனுபவிக்க முடியுமா?"

- ஆசிரியர் தலையங்கம்
'வீரகேசரி' - 07. 09. 1996

---

"...இன்று கடினமான எதிர்ப்புச்சக்தி வாய்ந்ததும் உயர்ந்தளவு உந்துசக்தி கொண்டதுமாகத் திகழும் விடுதலைப் புலிகள் அமைப்பை, அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், 80 களின் இறுதிப் பகுதியில, முதல்தரம் வாய்ந்த கெரில்லா இயக்கமாக உருவாக்கினார்.

... கிளசவிற்ஸ் முதல் மாவோ, சே குவேரா ஆகியோரைப் போல பிரபாகரனும் சிறிய நிரந்தர இராணுவத்தை, தமிழ் இராணுவ வரலாறு மூலமும் அதன் இலக்கியங்கள் மூலமும் கற்றறிந்து உருவாக்கிக்கொண்டார்.

- மேர்வின் டி சில்வா
('லங்கா கார்டியன்' ஏட்டின் ஆசிரியர்)

---

"இன்றைய நவீன ஆயுதங்களுடன் ஆண்டு தோறும் 4000 பில்லியன் ரூபா போர்ச் செலவை ஒதுக்கிக்கொண்டு, இலங்கை அரசு, புலிகளை எதிர்கொள்கின்றது. எனினும் வெற்றியொன்று அருகில் இல்லை.



www.eelamview.com

# முல்லைச் சமர்

**2900** மீற்றர் நீளமும், 1500 மீற்றர் அகலமும், 8500 மீற்றர் சுற்றளவும் உடையதும் -

முல்லை மாவட்டத்தின் பிரதான செயற்பாட்டு மற்றும் நிர்வாக மையமுமான முல்லைத்தீவு நகரையும், அகனோடு சேர்ந்த பெரும் கடற்பரப்பையும் ஆக்கிரமித்திருந்ததும் -

சிறிய ஒரு இராணுவ முகாமாக அமைக்கப்பட்டு, பத்தாண்டு காலத்தில் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு, குடியிருந்த மக்களை விரட்டியடித்துவிட்டு சுற்றியிருந்த கிராமங்களையும் உள்ளெடுத்த பெரும் படைத்தளமாக மாற்றமடைந்திருந்ததுமான -

முல்லைத்திவு சிங்களப் படைத்தளம், கடந்த ஆடி 18ஆம் நாள் அதிகாலை ஆரம்பிக்கப்பட்ட தாக்குதல் நடவடிக்கையின்மூலம் முழுமையாகவும் நிரந்தரமாகவும் கைப்பற்றப்பட்டதுடன், முல்லைத்திவு நகரமும் விடுவிக்கப்பட்டது.

'ரிவிரச'க்களுக்குப் பின்பு புலிகள் ஓய்வைக் கப்டட்டுவிட்டனர் என உண்மையிலேயே உலகம் நம்பியிருந்த வேளையில் நிகழ்த்தப்படுகின்ற தாக்குதல் என்பதால் -

சமர்க்கள நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, முழுமையான போர்த்திட்டத்தையும் நேரடியாகவே நெறிப்படுத்திவெற்றிகரமாகப் பூர்த்திசெய்த தலைவர் பிரபாகரன் அவர்கள், நடவடிக்கைக்கு ஓயாத அலைகள்' என்று பெயர் சூட்டினார்.

தாக்குதல் ஆரம்பித்த ஒரு மணி நேரத்திற்குள் முதலில் வெற்றிலைக்கேணியிலிருந்தும், பின்பு திருமலையிலிருந்தும் சிங்களக் கடற்படைகளத்துக்கு விரைந்தது. தளத்திலிருந்த படையினருககு உதவி வழங்குவதுடன, இறங்கியிருந்த புலிகளின் படையணிகளைக் கடல்வழியாகத் தாக்கவும் முயற்சித்தபோது, அது கடற்புலிகளின் கடும் எதிர்பபைச் சந்திக்கவேண்டியிருந்தது.

18ஆம் திகதி காலை 8.30 மணியளவில் - 8மணி நேரக் கடுஞ்சண்டைகளின் பின் -

வெளிப்புறக் காப்பு வியூகத்தை உடைத்தெறிந்து, கடல்வழியாகவும் தரைவழியாகவும் பல முனைகளினூடு நுழைந்த புலிகளின் போரணிகள், உப முகாம்களனைத்தையும் வீழ்த்தி - பிரதான முகாம் பகுதியைத் தாக்கி - தளத்தின் கட்டளைப் பணிமனை, 'ஆட்டிலறி' மற்றும் மோட்டர் ஏவுதளம், தொலைத்தொடர்பு நிலையம், போர்த் தளபாடக் களஞ்சியம் முதலியவற்றைக் கைப்பற்றி, எஞ்சிய துருப்புக்களை - பிரதான முகாமின் ஒரு பகுதியான - விஜயபாகு ரெஜிமெண்டின் 6 ஆவது படையணிச்செயற்பாட்டுத் தலைமையகப் பகுதிக்குள் முடக்கி வளைத்துக்கொண்டதுடன், தாக்குதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.


தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சேதப்பட்டும் களைப்படைந்துமருந்த தாக்குதலணிகளை மீள ஒழுங்கமைத்து, இரவானதும் முகாமின் எஞ்சிய பகுதியைத் தாக்கிக் கைப்பற்றுவதற்கான தயாரிப்புக்களில் தளபதிகள் பாடுபட்டுக்கொண்டிருந்த வேளை -

மாலை, 2 30 மணியளவில், முகாமிற்குத் தென்புறமாக 3 கிலோ மீற்றர் தூரத்தில் மீட்புப் படையினரைத் தரையிறக்கி - இன்னொரு சண்டை முனையைத் திறந்தான் எதிரி; மீட்பு நடவடிக்கைக்கு 'திரிவிட பஹர' எனப் பெயரும் சூட்டினான்.

தளத் தாக்குதல் பூர்த்தியடையாத நிலையிலும், இன்னொரு முனையில் எதிரியை எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்ட நிலையிலும், சிக்கலடைந்த இந்தக் களநிலைமையில் துரிதமாகத் திட்டமிட்ட தலைவர் அவர்கள், தரையிறங்கியவர்களை முற்றுகையிட்டு - இறுக்கமான சுற்றிவளைபுக்குள் வைத்துக்கொண்டு, முதலில், உடனடியாகத் தளத் தாக்குதலைப் பூர்த்திசெய்ய முடிவெடுத்தார்; அதனை முடித்துக்கொண்ட பின்பு, ஆறுதலாகவும் முழுமையாகவும், தரையிறங்கியவர்களைக் கவனிக்க முடியும் எனத் தீர்மானித்தார்.

அவரது திட்டத்தினைத் தளபதிகள் விரைவுடன்செயற்படுத்தியபோது, அன்றிரவு முல்லைத்தீவுப் படைத்தளம் புலிகளின் படையணிகளிடம் முழுமையாக வீழ்ச்சிகண்டது; அதே சமநேரத்தில், தரையிறக்கப்பட்ட படை மரணபொறிக்குள் சிக்கிக்கொண்டது.

கடுமையான சுற்றிவளைப்புத் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்த நிலையில் - உதவிக்கு அனுப்பிய - 'கொமாண்டோ'க்களுக்கு உதவி தேவைப்பட்டது! 19 ஆம் திகதி காலை, அடுத்த தொகுதி கொமாண்டோக்கள் வான்வழிமூலமே தரையிறக்கப்பட்டனர்; கடல்வழி உதவி வழங்கல் சாத்தியப்படவில்லை. அன்று மாலை 4. 30 மணிக்கு, 'திரிவிட பஹர'வில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 'ரணவிரு' பீரங்கிக் கடலூர்தி மூழ்கடிக்கப்பட்டது.




20 ஆம் திகதி, வான்வழிமூலமான இன்னுமொரு உதவி வழங்கலுக்கு எதிரி எத்தனித்தான். புலிகளின் கடுமையான மோட்டர் எறிகணைத் தாக்குதலில், எம். ஐ. 17 துருப்புக்காவி உலங்குவானூர்தி சேதப்பட்டது, முயற்சி பலிக்கவில்லை; வானூர்திகள் திரும்பின.

21 ஆம் திகதி, 'கிபிர்' மற்றும் 'புக்காரா' வானூர்திகள்மூலமும், 'டோரா'ப் படகுகள் மூலமும் கடற்புலிகளின் படகுகள் மீது கடுமையான தாக்குதலை நிகழ்த்தியவண்ணம், தரையிறக்கும் கலம்மூலம் ஒருதொகைக் கொமாண்டோக்கள் தரையிறக்கப்பட்டனர். எனினும், எவ்வித அசைவையும் செய்ய முடியாத இறுக்க முற்றுகைக்குள் அவர்கள், தொடர்ச்சியான இழப்புக்களையே சந்தித்தனர்.

22 ஆம் திகதி எவ்வித வழங்கலும் சாத்தியப்படவில்லை; 23 ஆம் திகதி, கரைக்கு வந்த தரையிறக்கும் கலம் மீது புலிகள் மோட்டர் எறிகணை வீசித் தாக்கியதில், அது பலத்த சேதப்பட்டு பின்னுக்கு எடுக்கப்பட்டது. 24 ஆம் திகதி, இன்னொரு தரையிறக்கும்கலம், கரும்புலித் தாக்குதலுக்கு அதிர்ஷ்டவசமாகத் தப்பித்துக் கொண்டது.

25 ஆம் திகதியும் கடல்வழியாக மேலும் துருப்புக்களைத் தரையிறக்க முடிந்தபோதும் - அவர்கள் தமது நோக்கத்தில் எதுவும் செய்ய முடியாத நிர்க்கதி நிலைக்குள் சிக்குண்டிருப்பதை, எதிரித் தலைமை உணர்ந்தது; அத்தோடு, பெரும் பொறிக்குள் அகப்பட்டு கொமாண்டோக்கள் பெரும் உயிரிழப்புக்களைச் சந்திப்பது மட்டுமன்றி, அவர்களை நிரந்தரமாகவே மீட்டெடுக்க முடியாத பேரழிவு நிகழ்ந்துவிடுமோ எனவும் அச்சப்பட்டது. தப்பியோடும் மனநிலையிலேயே இருந்த தன் ''மீட்புப் படை''யை, 26ஆம் திகதி, சிங்களத் தலைமை அவதி அவதியாக மீட்டெடுத்தது.

தளம் மீதான தாக்கி அழிக்கும் சண்டைகளிலும், மீட்புப் படைகள் மீதான தடுத்து நிறுத்தும் மற்றும் தாக்கி அழிக்கும் சண்டைகளிலும் - தரையிலும், கடலிலும் - 332 புலி வீரர்கள் களப்பலியாகினர்.


தளத்திலிருந்தவர்களில் குறைந்தது 1200 படையினரும், உதவிப் படையினரில் குறைந்தது 100 படையினரும் கொல்லப்பட்டனர்.

தமது படைகளால் புலிகளிடம் இழக்கப்பட்ட சுடுகருவிகள், மற்றும் போர்த் தளபாடங்களின் பெறுமதி 200 கோடி ரூபாக்களுக்கு அதிகம் என்று, சிங்களத் தரப்பிலேயே சொல்லப்படுகின்றது.

24 வயதுடைய தனது போராட்ட வரலாற்றில் விடுதலைப் புலிகள் இயக்கம் பெற்ற தீர்த்திமிகு பெரும் இராணுவ வெற்றிகளாக, முல்லைத்தீவுச் சமரும் 'சத்ஜய' படையெடுப்பை எதிர்கொண்ட சண்டைகளும் திகழ்கின்றன! ○



www.eelamview.com



# ஓயாத அலைகள்

- ஒரு நோக்கு

இராணுவ பரிமாணத்தைப் பொறுத்தளவில், ஓயாத அலைகள் இராணுவ நடவடிக்கைக்கும், 1991இல் புலிகள் நிகழ்த்திய ஆ. க. வெ (ஆகாய கடல் வெளி) சமருக்குமிடையே சில ஒத்த தன்மைகள் உண்டு. இரண்டும் இருவேறு முனைகளில் - இருவேறு வடிவிலான சண்டைகளைக்கொண்ட, பாரிய இராணுவ நடவடிக்கைகள் ஆகும்.

'ஆ. க. வெ நடவடிக்கை'யானது ஆனையிறவுத் தளம்மீதான ஒரு தாக்குதற் சண்டையையும் (Offensive), வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்ட துருப்பினரைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்தைக்கொண்ட தற்காப்புச் சண்டையையும் (Defensive) கொண்டமைந்திருந்தது. இதுபோல, 'ஓயாத அலைகள்' இராணுவ நடவடிக்கையும், முல்லைத்தீவுத் தளம்மீதான தாக்குதலையும், சிலாவத்தையில் தரையிறக்கப்பட்ட 'கொமாண்டோ'க்களுடனான தற்காப்புத் தாக்குதல்களையும் கொண்டமைந்துள்ளது.

எனினும், 'ஆ. க. வெ. நடவடிக்கை'யின்போது, புலிகள் இந்த இரண்டுவகைப் போர் அரங்குகளிலும் வெற்றிபெற முடியவில்லை. ஆனால், 'ஓயாத அலைகள்' நடவடிக்கையில், இருவகைச் சண்டைகளிலும் புலிகள் முழு வெற்றியைப் பெற்றுவிட்டனர்.

'ஓயாத அலைகள்' இராணுவ வெற்றியானது, நான்கு விடயங்களில் முக்கியத்துவம் பெறுகின்றது.

(i) பெரும் எண்ணிக்கையில் இராணுவத்தை அழித்தமை.

(ii) பெருந்தொகையில், ஆயுதங்களும் வெடிப்பொருட்களும் கைப்பற்றப்பட்டமை.

(iii) தரையிறக்கத்தை முறியடித்தமை.

(iv) நிலத்தை மீட்டெடுத்தமை.

இந்தத் தாக்குதலில் 1200இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டமை, உலக இராணுவ வரலாற்றில் ஒரு சாதனையாகவே பதியப்படக்கூடியது. நாடுகளுக்கிடையேயான பாரிய யுத்தங்களில் நடைபெறக்கூடிய இத்தகைய பெருந்தொகைச் சாவுகள், ஒரு விடுதலைப் போரில், கெரில்லாமுறையிலான ஒரு திடீர்த் தாக்குதலில் நிகழ்வது என்பது அரிதான விடயமாகும். 1954 ஆம் ஆண்டு, தின் - பின் - பூ (வியட்நாம்) சமரில், இதேபோன்றதொரு பெரும் அழிவை பிரான்சுப் படைகள் சந்தித்துள்ளன. ஆனால், அந்த முற்றுகைச் சமர் 56 நாட்கள் நடந்ததென்பது குறிப்பிடத்தக்கது. அதில் 8000 பிரான்சுப் படையினர் பலியாகினர்; ஆனால், அதைவிட அதிக தொகையான வியட்னாம் போராளிகள் பலியாகினர்.

குறைந்த எண்ணிக்கையான போராளிகள் வீரச்சாவடைந்து பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினரைக் கொன்றது, முல்லைத் தளத் தாக்குதலின் சிறப்புப் பரிமாணம் ஆகும். அத்துடன், இரண்டு மூன்று நாள் சண்டையில் ஆயிரத்திற்கும் அதிகமான அரசுப்படையினர் கொல்லப்பட்டமை, அதிசிறப்புவாய்ந்த ஒரு இராணுவ நிகழ்ச்சியாகும். மொத்தத்தில் இராணுவ 'கின்னஸ்' புத்தகத்தில் பதியப்படவேண்டிய ஒரு வியசாதனை என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

'ஒப்பறேசன் தவளை'யில் கொல்லப்பட்ட படையினரது எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது, 'ஓயாத அலைகளு'க்குள் சிக்கிச் செத்த படையினரின் தொகை, ஏறக்குறைய இருமடங்காகும்.

'சூரியக்கதிர்'களுடன் புலிகள் இயக்கத்தின் பற்களும் - நகங்களும் பிடுங்கியெறியப்பட்டுவிட்டன என்ற அரசின் பரப்புரையை நம்பிய சிங்கள மக்கள், செய்தி அறிந்து திகைத்திருப்பார்கள். எனினும், படையினர் மத்தியில் பீதியூட்டும் விடயம் யாதெனில், இந்த இராணுவ அழிவு எப்படி நடந்தது என்பதைக் கண்டறிய முடியாத கையறுநிலையில் இராணுவத் தலைமை இருப்பதாகும். 'ஓயாத அலைகள்' நடவடிக்கையில் புலிகள் பெற்ற இராணுவ வெற்றியின் உளவியல் பரிமாணம் இதுவாகும்.

அத்துடன், தளத்தினுள் சிக்குண்ட படையினரை மீட்டுவர அனுப்பிய 'கொமாண்டோ' படையினரையே மீட்டெடுக்க வேண்டிய அளவுக்கு, களநிலைமை சிக்கலாகிவிட்டது!

முல்லைத்தீவுத் தளம் மீதான தாக்குதலைப் பொறுத்தவரை, காலம் முக்கிய இடத்தை வகித்துள்ளது.

''புலிகளின் பலத்தில் 70 வீதம் அழிக்கப்பட்டுவிட்டது; மிகுதி 30 வீதத்தையும் வன்னியில்வைத்து அழிக்கப்போகின்றோம்'' என்ற ரத்வத்தவின் எகத்தாள விமர்சனம், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கவனத்தை ஈர்த்திருந்த காலம் அது -

புலிகள் இயக்கத்தின் இறுதி அத்தியாயம் எப்படி அமையப்போகின்றது என்று, உலகம் அவதானித்துக்கொண்டிருந்த நேரம் அது -

குடாநாட்டைப் படையினர் கைப்பற்றியதைக் கண்டு, போராட்ட வெற்றியில் எமது மக்களும் அவநம்பிக்கை கொண்ட காலம் அது.

இத்தகையதொரு கஷ்டகாலத்தில் - அகில உலகுமே ஆச்சரியப்படும்வகையில் - முல்லைத்தீவுத் தளத்தை நிர்மூலம்செய்து, தமிழினத்திற்கு ஒரு பெரிய வெற்றியைத் தலைவர் பிரபாகரன் பெற்றுக்கொடுத்துள்ளார்.

1200இற்கும் மேற்பட்ட படையினரைக் கொன்றது மட்டுமல்ல - 'ஆட்டிலறி', ஆர். சி. எல்., பவள் மற்றும் 120 எம். எம். மோட்டர்களுடன் பெருந்தொகையான வெடிப்பொருட்களையும் கைப்பற்றியதோடு, ஒரு பீரங்கிக் கப்பலையும் அழித்து, சிங்களப் பேரினவாத பூதத்திற்குப் புலிகள் ஒரு 'அதிர்ச்சி வைத்தியம்' செய்துள்ளனர். இந்தக் கதைகள் வெளியே உறுதிப்படுத்தப்பட்டபோது உலகம் ஆச்சரியப்பட்டது; விமர்சகர்கள் வாயடைத்துப்போயினர். இந்த இராணுவ அற்புதம் எப்படி நடந்தது என்று, அவர்கள் மலைத்துப்போயினர்; இதை ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக உலகப் போர் வரலாற்றை மீட்டுப் பார்த்தனர்.

1968 ஆம் ஆண்டு, அமெரிக்கப் படையினர்மீது வியட்நாம் போராளிகள் நிகழ்த்திய - ரெற் தாக்குதல் (Tet offensive) என்று அழைக்கப்பட்ட - ஒரு பெருந்தாக்குதலை முல்லைத்தீவுத் தளத் தாக்குதலுடன் ஒப்பிட்டு உலகச் செய்தியாளர் ஒருவர் வர்ணித்திருந்தார்.

அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த தென் வியட்னாமின் பிரதான நகரங்கள்மீது ஒருநாள், திடீரென வியட்கொங் இயக்கம் போர்தொடுத்தது; இதற்கு 'ரெற் தாக்குதல்' என்று பெயரும் இட்டது.

இந்தத் தாக்குதலிலும் காலம் மிக முக்கிய இடத்தை வகித்தது. தென் வியட்னாமில் இருந்து வியட்கொங் இயக்கத்தைத் தாம் நசுக்கிவிட்டதாக, அமெரிக்கத் தலைமை தம்பட்டம் அடித்துக்கொண்டிருந்த காலம் அது; எல்லாம் முடிந்துவிட்டது என்று அமெரிக்க மக்களும் நம்பயிருந்த வேளை அது. அந்தச் சூழ்நிலையில்தான், ஒருநாள் விடிகாலை, 'ரெற் தாக்குதல்' என்ற பெயரிலான அந்தப் பாரிய மரபுவழித் தாக்குதலை, அமெரிக்கப் படைநிலைகள் மீது வியட்கொங் போராளிகள் தொடுத்தனர். இந்தப் பெருந்தாக்குதல், அமெரிக்க அரசுக்குப் பெரிய அரசியல் நெருக்கடியைக் கொடுத்துவிட்டது.

இதுபோலவே, ''புலிகளின் கதையும் முடிந்துவிட்டது'' என்று சிங்கள அரசு பிரகடனப்படுத்தியிருந்த காலகட்டத்தில்தான்,



அதிர்ச்சி அடி: கைப்பற்றப்பட்ட 'பவள்' வண்டியுடன் தளத்தில் புலிகள்.



புலிகளோடு மக்கள்; மக்களோ புலிகள்!
தளப்பகுதியிலிருந்து ஆயுதங்களை அகற்றும் பணியில்
தம் போராளிகளுக்குத் துணை செய்யும் மக்கள்.

முல்லைத்திவுத் தளம்மீதான பெருந்தாக்குதலும் நிகழ்ந்தது.

எனினும், வியட்னாமின் புகழ்பூத்த தளபதி ஜெனரல் ஜியாப் தலைமை ஏற்று நடாத்திய 'ரெற் தாக்குதலுக்கும், தலைவர் பிரபாகரன் திட்டமிட்டு தலைமைதாங்கி நடாத்திய 'ஓயாத அலைகள்' தாக்குதலுக்குமிடையே, அரசியல் மற்றும் உளவியல் பரிமாணங்களில் ஒற்றுமை இருந்தாலும், இராணுவ பரிமாணத்தில் வேறுபாடுகள் பல உண்டு.

'ரெற் தாக்குதல்' அமெரிக்கப் படையினரைத் திணறடித்தது என்பது உண்மை; ஆனால், ஒருசில நாட்களில் அப்பெருந்தாக்குதலை அமெரிக்கப் படைகள் முறியடித்துவிட்டன. ஆகவே, 'ரெற் தாக்குதல்' இராணுவரீதியில வியட்கொங் இயக்கத்திற்கு வெற்றியைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

ஆனால், 'ஓயாத அலைகள்' நடவடிக்கையானது, அரசியல் மற்றும் உளவியல் பரிமாணங்களுடன் - ஒரு பாரிய இராணுவ வெற்றியையும் புலிகள் இயக்கத்திற்குப் பெற்றுக் கொடுத்துள்ளது. 'ரெற் தாக்குதல்'ப் போலல்லாது, இங்கே, தாக்குதல் இலக்கைப் புலிகள் முழுமையாகக் கைப்பற்றி - தம்வசப்படுத்திவிட்டனர்; அங்கிருந்த சிங்களப் படையை முழுமையாக அழித்துவிட்டனர்; எதிரி வைத்திருந்த ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றிவிட்டனர்; எதிரி ஆக்கிரமித்து வைத்திருந்த நிலப்பகுதியையும் மீட்டுவிட்டனர்.

'ரெற் தாக்குதலை' 'ஓயாத அலைகள்' தாக்குதலுடன் இணைத்துப் பார்த்த அந்த வெளிநாட்டுச் செய்தியாளரின் ஒப்பீடு, புறச்சூழல் ரீதியாக மிகச் சரியானதே.

எனினும், 'ஓயாத அலைகள்' தாக்குதலின் இராணுவ பரிமாணத்தை, 1941இல் ஜப்பான் நடாத்திய பேள் துறைமுகத் தாக்குதலுடன் - சில விடயங்களில் - ஒப்பிட முடியும்.

'பேள்' துறைமுகத்தின் பலம்- உட்புக முடியாத அதன் பாதுகாப்பான அமைவிடம் - என்பவற்றிற்கு மத்தியில் ஜப்பானியப் படைகள் நடாத்திய, துணிகரமான - ஆச்சரியமூட்டும் வெற்றித் தாக்குதல், இராணுவ வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

தாக்குதலின் தன்மை - எதிரிப்படைக்கு ஏற்படுத்திய அழிவு என்பவற்றுடன் ஒப்பிடும்போது, 'பேள்' துறைமுகத் தாக்குதல், 'ஓயாத அலைகள்' நடவடிக்கையின் சில இராணுவ அம்சங்களுடன் ஒப்புநோக்கத் தக்கது.

கடந்த வருடம் ( 1995 ), புலிகள் இயக்கம் பல இராணுவப் பின்னடைவுகளைச் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது; இதுகாரணமாக விடுதலைப் போராட்டம் ஒரு ஸ்தம்பித நிலையில் நின்றது.

இவ்விதம் 'போராட்ட வண்டி' புதையுண்டுபோகும் சந்தர்ப்பங்களிலெல்லாம், தலைவர் பிரபாகரன், தானே நேரடியாக முன்னின்று போராட்ட வண்டியை முன்னோக்கி உந்தித்தள்ளும் வரலாற்றுப் பொறுப்பை ஆற்றிவந்துள்ளார்.

'ஓயாத அலைகள்' இராணுவ நடவடிக்கை வாயிலாக, இம்முறையும் அதையே செய்துள்ளார்.

தென்மராட்சி - வடமராட்சியிலிருந்து போராளிகளை வன்னிக்குப் பின்வாங்குமாறு உத்தரவிட்ட பின்னர், வன்னியில் ஒரு பாரிய தாக்குதலை நடாத்தி - இராணுவபல சமநிலையில் தமிழினத்திற்குச் சார்பான மாற்றத்தை ஏற்படுத்த, தலைவர் தீவிரமாக உழைத்தார் -

முல்லைத்திவு இராணுவத் தளத்தை நிர்மூலமாக்கி, அந்த பலச் சமநிலையை உருவாக்க முடிவெடுத்தார்.

ஏற்கெனவே, பல இராணுவ இழப்புக்களை அடுத்தடுத்துச் சந்தித்த நிலையில், முல்லைத் தளம் மீதான தாக்குதலும் புலிகளுக்கு ஒரு இராணுவப் பின்னடைவைக் கொடுக்குமாயின் போராட்டத்தின் தலைவிதி என்னவாகும் என்பதையும், தலைவர் தெரிந்துவைத்திருந்தார்.

எனவே, தாக்குதலின் வெற்றியை நூறுவீதம் உறுதிப்படுத்தவேண்டிய தேவை அவருக்கு இருந்தது; இதனால், தாக்குதலின் முழுப் பொறுப்புக்களையும் தலைவர் தன்வசம் எடுத்தார்.

தாக்குதலுக்கான பயிற்சி, வேவு, சமரின்போதான மருத்துவம், வழங்கல் வேலைகளுக்கான முன்னேற்பாடுகள் மற்றும் தாக்குதலணிகளை இடம்மாற்றுதல் என்று... தாக்குதல் தொடர்பான எல்லா வேலைகளையும் தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ் வைத்திருந்தார்.

திட்டங்களின்படி அச்சொட்டாகத் தாக்குதல்களை நடாத்தவும் - தாக்குதல் தொடர்பான இரகசியம் பேணலை முழுமையாக உறுதிப்படுத்தவும், அவ்விதம் செய்தார்.

முல்லைத்திவுத் தள வெற்றிக்கான அடிப்படைகளில், 'இரகசியம் காத்தல்' முக்கிய இடத்தை வகித்தது; அத்துடன், அற்புதமான தாக்குதல் திட்டம் வெற்றியின் முதுகெலும்பாக இருந்தது. அதேவேளை, தாக்குதலின்போது காட்டப்பட்ட வேகமும் - திகைப்பூட்டலும் வெற்றிக்கு அணிசேர்த்தன.


இந்தவகையில், சோர்வடைந்திருந்த தமிழினத்திற்கு நம்பிக்கை தரும் வகையிலும் - தமிழர் படையின் ஆயுதபல உயர்ச்சிக்கு வழிகோலும் வகையிலும், 'ஓயாத அலைகளி'ன் வெற்றி அமைந்துவிட்டது.

இந்தப் பெருந்தாக்குதலைத் திட்டமிட்டு - நெறிப்படுத்தி, நடாத்தியதன்மூலம், தலைவர் பிரபாகரன், ஒரு வரலாற்று வெற்றியைத் தமிழினத்திற்குப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

'ஓயாத அலைகளி'ல் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கையைப் போலவே, அதில் கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களின் வகைகளும் - தொகைகளும் போராட்டத்திற்குப் புதிய பலத்தைக் கொடுத்துள்ளன.

முதன்முதலாக, புலிகளின் கைகளிற்கு, நடுத்தர தூர வீச்சைக் கொண்ட (15. கி மீ. பாயக்கூடிய) 'ஆட்டிலறி'களில் இரண்டு வந்து சேர்ந்துள்ளன. அத்துடன், ஆர். சி. எல். மற்றும் 120எம்.எம். (ஐந்து அங்குல) மோட்டார்களுடன், அவற்றிற்கான எறிகணைகளும் கணிசமான அளவில் கைப்பற்றப்பட்டுள்ளன.

மரபுவழிப் படையாக வளர முனையும் புலிகளின் முயற்சிக்கு, கைப்பற்றப்பட்ட இந்த மரபுப்போர் ஆயுதங்கள் பெரிதும் உதவியுள்ளன. இந்த



அழகுபூத்த எமதுமண்ணை அழிக்க நினைத்தவா
அகதியாக்கி தெருவோரம் மழையில நனைத்தவா
அமைதியாக உறங்கும்நேரம் உனக்கு இனியில்லை;
அன்னைதேசம் விடியும்வரையும் எமக்கும் அது இல்லை!'

# புரியாத புதிர்!

ஜெயசிக்குறு — 1, 2, 3 நடவடிக்கைகள் புலிகள் இயக்கத்தின் போரிடும் திறனை நசுக்கிவிட்டன என்பது, சிங்கள அரசினது கருத்துமட்டுமல்ல; பெரும்பாலான உலக இராணுவ — அரசியல் ஆய்வாளர்களும் அவ்வாறே கருதினர்.

பாரிய முகாம் தகர்ப்புகளை புலிகளால் இனிமேல் நடாத்த முடியாது என்றும், அரசுக்கு தலையிடியைக் கொடுக்கும் வகையில் சிறு சிறு தாக்குதல்களை மட்டுமே புலிகளால் நடாத்த முடியும் என்றும், அவர்கள் கருத்துக் கூறியிருந்தனர்.

சுருக்கமாகச் சொன்னால், தீவிரம் குறைந்த ஒரு போர்முறையை (Low intensive warfare) மேற்கொள்ளவே புலிகளின் தற்போதைய இராணுவ பலம் இடங்கொடுக்கும் என்று, பெரும்பாலான ஆய்வாளர்கள் ஆருடம் கூறியிருந்தனர்.

ஆனால், இத்தகைய படையியல் கணிப்பீடுகள் மற்றும் இராணுவ அபிப்பிராயங்கள் அனைத்தையும், ஓயாத அலைகள் மூழ்கடித்துவிட்டது.

தென்மராட்சி - வடமராட்சியிலிருந்து போரிடாது பின்வாங்கிய புலிகளின் செயலைப் புரிந்துகொள்ள முடியாது திண்டாடிய இராணுவ உலகம், முல்லைத்தீவு படைத்தளத்தைப் புலிகள் கைப்பற்றிவிட்டனர் என்ற செய்தி வெளியானவுடனும், புலிகள் இயக்கத்தைப் புரிந்துகொள்ள முடியாது விழித்தனர்.

மொத்தத்தில், இராணுவ உலகிற்கு அன்றும் இன்றும் புலிகள் இயக்கம் ஒரு புரியாத புதிராகவே உள்ளது.

தலைவர் பிரபாகரனின் இராணுவச் செயற்பாடுகளில் உள்ள தனித்தன்மைகளே, புலிகள் இயக்கத்திற்கு இத்தகைய புதிர்த் தன்மைகளைக் கொடுத்துள்ளன.

புலிகள் இயக்கம் பற்றிய இராணுவ மதிப்பீடுகளை சமகால ஆய்வாளர்களால் சரியாகக் கணிக்க முடியாதுள்ளதற்குப் பிரதான காரணம், அந்த ஆய்வாளர் வைத்திருக்கும் இராணுவ அளவுகோல்கள் தான்.

இந்த அளவுகோல்கள், உலகின் இராணுவ சிந்தனையாளர்கள் மற்றும் புகழ் பூத்த படைத் தளபதிகள் ஆகியோரின் போதனைகள், அனுபவங்கள் என்பவற்றால் ஆக்கப்பட்டுள்ளன.

ஆனால், இதற்கும் அப்பால், தலைவர் பிரபாகரனின் இராணுவ சிந்தனைகளும் செயற்பாடுகளும், பெரும்பாலும் தனித்தன்மை வாய்ந்தவைகளாக அமைந்துள்ளன. இதுகாரணமாக, தாம் வைத்திருக்கும் இராணுவ அளவுகோல்களைப் பயன்படுத்திப் பிரபாகரனின் போர்க்கலையைச் சரியாக அளந்து — கணிக்க முடியாது, வல்லுநர்கள் திண்டாடுகின்றனர்.

இதனால்தான், புலிகள் இயக்கம்பற்றி இராணுவ விமர்சகர்கள் கூறும் கருத்துக்கள் - கணிப்புகளில், அடிக்கடி பெருந் தவறுகள் ஏற்பட்டுவிடுகின்றன.



என்றைக்குத் தலைவர் பிரபாகரன் தனது போர்க்கலைமுறைகளை விரிவாக விளக்கி உலகிற்கு வழங்குகின்றாரோ அன்றைக்குத்தான், புலிகள் இயக்கம் பற்றிய புதிரும் விடுபடும்! ○



தளப்பகுதியில் போராளிகளுடன்- தளபதிகள் பால்ராஜ், பானு ஆகியோர்.

ஆயுதங்களை வைத்துக்கொண்டு - எதிர்காலத்தில் - போரில் பல அதிசயங்களை, தலைவர் பிரபாகரன் நிகழ்த்திக்காட்டுவார் என்று எதிர்பார்க்கலாம்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் வகைகள், கொல்லப்பட்ட படையினரின் தொகை என்ற வகையிலான இராணுவ பரிமாணம் ஒருபுறம் இருக்க, 'ஓயாத அலைகள்' இராணுவ நடவடிக்கை, சிங்களர்-தமிழர் படைகளுக்கிடையேயான போர் வரலாற்றிலும் ஒரு பிரத்தியேக இடத்தை வகிக்கப்போகின்றது.

சிங்கள அரசின் முப்படைப் பலப்பிரயோகத்துடன் நடந்த கடல் - வான்வழித் தரையிறக்கத்தை முறியடித்த செயலே, அதன் பிரத்தியேக முக்கியத்திற்குக் காரணமாகும். தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்ட வரலாற்றில் இந்தச் சம்பவம், ஒரு மைல் கல்லாக அல்லது போராட்ட வளர்ச்சியைச் சுட்டிக்காட்டும் ஒரு படிக்கல்லாக அமையும் என்பது உறுதி.

உதவிப் படை என்பது, மரபுவழிப் போர்முறையில் குருதிச் சுற்றோட்டம் போன்றது. நெருக்கடிக்குள் சிக்குண்டு திண்டாடும் படைத்தளங்களுக்குப் புதிய சக்தியை ஊட்டி அதைப் பாதுகாப்பது, இந்த உதவிப் படைதான்.

கடற்படைப் பலத்தாலும் வான்படைப் பலத்தாலும் சிலாவத்தையில் தரையிறக்கப்பட்ட 'கொமாண்டோ' துருப்பினரைக் கொண்ட இந்த உதவிப் படை, தனது இலக்கை அடையமுடியாது - வந்தவழியே திரும்பிச் சென்றதற்குக் காரணமான புலிகளின் மரபுப்போர் வளர்ச்சிதான், சிங்களப் பேரினவாத இராணுவ சக்திகளுக்கு அதிக கவலையை ஏற்படுத்தியிருக்கும்.

தரையிறக்கப் போர்ச் செயற்பாடுகளை இரண்டு பிரதான வகைகளுக்குள் அடக்கிவிடலாம்.

ஒன்று, 'கொமாண்டோ' பாணியிலான தரையிறக்கம்; மற்றது, மரபுவழித் தரையிறக்கம்.

'கொமாண்டோ' பாணியிலான தரையிறக்கம் கடல்வழிமூலமும் நடக்கும்; வான்வழிமூலமும் நடக்கலாம். இந்தவகைத் தாக்குதல்கள், ஆச்சரியமூட்டலை அடிப்படையாகக் கொண்டவை; தரையிறக்கம் இரகசியமாக நடைபெறும். 'வந்தா வா! போனால் போ!' என்கின்ற துணிச்சலான நிலை இந்தவகைத் தரையிறக்கத்தில் இருக்கும்; ஈடுபடும் படையினரின் எண்ணிக்கையும் மிகக் குறைவாக இருக்கும்; ஏதாவது நாசவேலைகள் செய்ய அல்லது எவராவது ஒருவரைக் குறிவைத்து அல்லது ஒரு சிறிய இராணுவ நிலையை அழிக்க இந்தவகைத் தாக்குதல்கள் நிகழ்த்தப்படும். இந்த முயற்சி தோல்வியைத் தழுவினாலும் குறித்த 'கொமாண்டோ'க்களின் இழப்பு என்கின்ற சிறிய விடயத்துடன், அதன் இராணுவ பரிமாணம் நிறைவுபெறும். இத்தகைய இழப்பையிட்டு, சம்பந்தப்பட்ட இராணுவத் தலைமை பெரிதாகக் கவலைகொள்ள மாட்டாது.

ஆனால், மரபுவழித் தரையிறக்கம் இதற்கு முற்றிலும் நேர்மாறானது.

கடல் - வான் படைபலத்துடன், பெருமெடுப்பில் இந்தவகைத் தரையிறக்கம் நடக்கும். ஒரு பிரதேசத்தைக் கைப்பற்ற அல்லது அபாயத்தில் இருக்கும் ஒரு படைத்தளத்தை மீட்க என்று, பாரிய இராணுவ இலக்குகளே இந்தவகைத் தரையிறக்கங்களின் நோக்கங்களாகும்.

இத்தகைய முயற்சிகள் தோல்வியடைவது என்பது, பெருமளவிலான உயிரச்சேதத்தையும் ஆயுத இழப்பையும் உண்டாக்கும்; அத்துடன், அரசுப் படையினதும், அதன் எதிர்ப் படையினதும் பலம் பற்றிய இராணுவ யதார்த்தத்தையும் அது புலப்படுத்திவிடும்.

சிலாவத்தைத் தரையிறக்கம் ஒரு மரபுவழித் தரையிறக்கமாகும். தரையிறக்கப்பட்ட நோக்கத்தை அடைய முடியாது சிங்களப் படை தோல்விகண்டுவிட்டது; இதை எவரும் மறுக்க முடியாது.

இதன் காரணமாக, கடற்பலத்தில் தங்கிநின்று - தரையிறக்கத்தை நம்பி, வடபுலப் படை முகாங்களைப் பாதுகாத்து வைத்திருக்க முடியும் என்ற அரசின் இராணுவக் கொள்கை, இப்போது சவாலைச் சந்தித்து நிற்கின்றது.

வான்பரப்பு மீதிலும் - கடற்பரப்பு மீதிலும் புலிவீரர்கள் தொடுத்த எதிர்த் தாக்குதல்களையும் எதிர்கொண்டபடி, அரசுப் படைகள் தரையிறக்கத்தைச் செய்துவிட்டன. ஆயினும், தரையிறங்கிய சிங்களச் சிறப்புப் படையினருக்கு முன்பாகத் தடுப்புச் சுவர்போல நின்ற புலிகளின் சேனையை ஊடறுத்துக்கொண்டு முன்னேற, படையினரால் முடியவில்லை.

முல்லைத் தளம் மீதான தாக்குதல் தொடங்கிய தினமன்றே (18 ஆம் திகதி), மாலையில், உதவிப் படையின் ஒரு அணி தரையிறக்கப்பட்டுவிட்டது; அதுவும், தளத்திற்கு மிக அருகில் - சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் - அவர்கள் தரையிறக்கப்பட்டனர். இவர்கள் சாதாரண படையினர் அல்ல; 'கொமாண்டோ' பயிற்சி பெற்ற சிறப்புப் படையினர் சண்டை அனுபவம் மிக்க 'கொமாண்டோ'ப் படையினர்.

தளம் நோக்கிய இவர்களின் நகர்வுக்கு, கடற்படையும் வான்படையும் உதவின; எனினும், அவர்களது முயற்சி வெற்றிபெறவில்லை. அந்தளவிற்கு புலிகளின் தரைத்தாக்குதல்கள் அமைந்திருந்தன.

1991 ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணிக் கடற்கரையில் தம்மால் செய்யமுடியாததை - ஐந்து வருடங்களின் பின் - புலிகள் சிலாவத்தையில் செய்து முடித்தனர்.

மரபுவழி யுத்தமுறையிலான தரைப்போரில் புலிகள் இயக்கம் பெற்றுவரும் வளர்ச்சியையே, இந்த வரலாற்றுச் சம்பவம் சுட்டிக் காட்டுகின்றது.


சிலாவத்தைத் தரையிறக்கம் தோல்விகண்டது காரணமாக - எதிர்காலத்தில் - மரபுவழித் தரையிறக்கத்திற்கு அரசுப் படைகள் துணியாதென்ற பிழையான முடிவுக்கு எவரும் வரக்கூடாது. எனினும், இத்தகைய தரையிறக்கங்கள் இனிமேல், சூது விளையாட்டைப் போல அமையும் என்பதையும் சிங்களத் தளபதிகள் மறுக்கமாட்டார்கள்! ○



www.eelamview.com

# வெற்றியின் நாயகர்கள்

'ஓயாத அலைகளி'ன் வெற்றிக்கு வித்தாகிய, வேவுப் புலி வீரர்கள் இவர்கள்! தமிழினம் மகுடம் சூடிய அந்தச் சரித்திர நிகழ்வுக்கு அடிக்கற்களாகி, அமைதியாக உறங்கும் எம் நெஞ்சினிய தோழர்கள்! யாழ்ப்பாணத்தைப் பிடித்த வெற்றிக்கு, கொழும்பில் சிங்களம் விழா எடுத்துநின்ற வேளை – உள்ளத்தில் சபதமெடுத்த தலைவனின் வேட்கையை எண்ணத்தில் சுமந்து அவர்கள் புறப்பட்டபோது – தம் உயிர்வாழ்விற்கான சாத்தியத்திற்கும் அசாத்தியத்திற்கும் ஊடாக, எம் போராட்டத்தின் புத்துயிர்ப்பையும் எம் மக்களின் புதுவாழ்வையும் தீர்மானிப்பதாய்ப் பயணம் போனார்கள். நீரோடு மிதந்து, நிலத்தோடு தவழ்ந்து, நிலவில்லா வானத்தின் கீழ் இருளோடு நகர்ந்து, தம்மையே வருத்தி வருத்தி அவர்கள் சிறுகச் சிறுகச் சேர்த்துத் தந்த வெற்றி இது. இன்று – முல்லை நகரத்தின் நடுவில் நிமிர்ந்துள்ள எம் புலிக்கொடி, அவர்களின் உயிர் கலந்த காற்றில் கம்பீரமாக அசைகிறது!



**மேஜர் சேகரன் / பாலவன்**
கணேஸ் திருக்குமரன்
முல்லைத்தீவு.
19.04.73 - 31.12.95
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு ஆரம்பித்தபோது, வட்டுவாகல் பகுதியில் படையினர் பதுங்கித் தாக்கியதில்.



**கப்டன் நாவரசன்**
மகாலிங்கம் கஜேந்திரன்
வவுனியா.
25.08.73 - 19.01.96
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவின்போது, சிலாவத்தைப் பகுதியில் படையினர் பதுங்கித் தாக்கியதில்.



**லெப். ஈழப்பிரியன்**
கந்தசாமிநாதன்
ஏகாம்பரநாதன்
கிளிநொச்சி.
11.01.74 - 17.06.96
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவின்போது, சிலாவத்தைப் பகுதியில் எறிகணை வீச்சிற்கு இலக்காகி.




**கப்டன் நிலவன்**
நெல்லநாதப்பிள்ளை
உருத்திரமூர்த்தி
வவுனியா.
21.05.74 - 27.06.96
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவின்போது, வட்டுவாகல் பகுதியில் மிதிவெடியில் சிக்கியதால் சயனைட் உட்கொண்டு.



**கப்டன் ஆதவன்**
மகேந்திரன் பரமேஸ்வரன்
திருமலை.
14.09.78 - 05.07.96
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவின்போது, வட்டுவாகல் பகுதியில் படையினர் பதுங்கி இருந்து தாக்கியதில்.



**கப்டன் ராம்குமார்**
சந்தனம் யோகேஸ்வரன்
வவுனியா.
19 04 72 - 18.07.96
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு பார்த்து, பின்னர், தாக்குதலணிக்கு வழிகாட்டியாகச் செல்கையில்.



**கப்டன் கவிஞன்**
தங்கவேல் ரமேஸ்வரன்
முல்லைத்தீவு
29.05.75 - 18.07.96
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு பார்த்து, பின்னர், தாககுதலணிக்கு வழிகாட்டியாகச் செல்கையில்.



**கப்டன் மயூரன்**
கிட்ணன் செல்லன்
யாழ்ப்பாணம்.
18.04.73 - 18.07.96
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு பார்த்து, பின்னர், தாக்குதலணிக்கு வழிகாட்டியாகச் செல்கையில்.



**கப்டன் வேங்கையன்/வதனன்**
சுப்பிரமணியம் கேதீஸ்வரன்
யாழ்ப்பாணம்.
12 05.76 - 18.07.96
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு பார்த்து, பின்னர், தாக்குதலணிக்கு வழிகாட்டியாகச் செல்கையில்.



**கப்டன் முத்தமிழன்**
கிருஷ்ணபிள்ளை மனோகரன்
யாழ்ப்பாணம்.
19.05 75 - 18.07.96
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு பார்த்து, பின்னர், தாக்குதலணிக்கான வழிகாட்டியாகச் செல்கையில்.



**கப்டன் சாளமன்**
கதிரிப்பிள்ளை மகேஸ்வரன்
யாழ்ப்பாணம்.
07.05.1975 - 18.07.96
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு பார்த்து, பின்னர், தாக்குதலணிக்கான வழிகாட்டியாகச் செல்கையில்.



**லெப்ரினன்ற் இசைக்கோன்**
பத்மநாதன் யோகேஸ்வரன்
யாழ்ப்பாணம்.
22.11.78 - 18.07.96
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு பார்த்து, பின்னர், தாக்குதலணிக்கான வழிகாட்டியாகச் செல்கையில்,



**மேஜர் குருசங்கர்**
பழனியாண்டி மகேந்திரன்
வவுனியா.
19.04.72 - 20.07.96
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு பார்த்து, பின்னர், தாக்குதலணிக்கான வழிகாட்டியாகச் செல்கையில்.



**மேஜர் அறிஞன் / சத்தியன்**
கோபாலன் சிவகுமார்
மட்டக்களப்பு.
26.07.74 - 04.08.96
ஓயாத அலைகள் நடவடிக்கைக்கான வேவு பார்த்து - வழிகாட்டியாகவும் சென்று, பின்னர், 'சத்ஜய' படையெடுப்பிற்கு எதிரான சமரில்.

# முல்லைத்தீவு இராணுவத் தளம்:
# வடகரையின் வாளேந்திய சிங்கம்!

தமிழர் தாயகக் கோட்பாட்டின் உயிர் மையம் முல்லை மாவட்டத்திலேயே உள்ளது.

இதனால், வாளேந்திய சிங்கத்தின் வெட்டிலக்கு முல்லை மாவட்டமேயாகும்.

சிங்களக் குடியேற்றங்களை நிறுவி - இராணுவ முகாங்களை அமைத்து, முல்லைத்தீவு நிலத்தைச் சிங்கள மயமாக்குவதன்மூலம் வடக்குக் கிழக்கிற்கு இடையே ஒரு நிரந்தர தடுப்புச் சுவரை எழுப்பிவிடுவது, சிங்களப் பேரினவாதத்தின் திட்டம்.

இந்தவகையில், முல்லைத்தீவு இராணுவத் தளம், மணலாற்றுச் சிங்களக் குடியேற்றங்களுக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரம்.

அத்துடன், வடபுலக் கடலின் நுழைவாசலில் முல்லைத்தீவு அமைந்துள்ளது. இதுகாரணமாக, படையினரின் கப்பற் போக்குவரத்து விடயத்தில், முல்லைத்தீவுத் தளம் ஒரு காவற்காபுரம்.

இதேவேளை, வடக்கு - கிழக்குப் பிராந்தியக் கடல்களில், கடற்புலிகளின் நகர்திறனைத் தடுக்க முயலும் சாட்டை போலவும் முல்லை இராணுவத் தளம் செயற்பட்டது. இந்தளவுக்கு அரசியல் - இராணுவரீதியில, முல்லைத்தீவுப் படைத்தளம், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிலையாகும்.

மூன்றாம்பிறை வடிவத்தில், நந்திக்கடல் நீரேரி, முல்லைத்தீவு இராணுவத் தளத்தை அரண்செய்துள்ளது. அதன் எஞ்சிய பகுதியைப் பெருங்கடல், பொத்தி மூடிவைத்திருக்கின்றது.

ஒட்டுமொத்தத்தில், ஆமையின் மேல்ஒடு - கீழ்ஒடு போல, வங்கக்கடலும் - நந்திக்கடல் நீரேரியும் முல்லைப் படைத்தளத்தின் காப்புக் கவசங்கள்.

தளத்தின் தென்புறப் பகுதியில் மட்டும், ஒரு தரைவாசல் இருந்தது. அதுவும், ஒரு படையணி சுலபமாக ஊடுருவிச் செல்லமுடியாத அளவுக்கு, சதுப்புநிலத்தாலும் வெட்டவெளிகளாலும் அரண்செய்யப்பட்டுக் கிடந்தது.

தளத்தின் வடமேற்குப் பகுதியான வட்டுவாகல் பாலத்திலிருந்து தளத்தின் தென்கிழக்குப் பகுதியான சிலாவத்தை வரையான தூரம், ஏறக்குறைய மூன்று மைல் நீளமாகும். அதேவேளை, பெருங்கடலிலிருந்து நந்திக்கடல் நீரேரிவரை, ஏறக்குறைய ஒன்று ஒன்றரை மைல் தூர அகலத்தையும் கொண்டதாக முல்லைத் தளம் அமைந்திருந்தது. அதாவது, சுமார் ஐந்து சதுரமைல் பரப்பளவில் இந்தப் படைத்தளம் அமைந்திருந்தது.

1968 ஆம் ஆண்டு, முல்லைத்தீவில் முதன்முதலில் ஒரு சிங்கள இராணுவ முகாம் ஏற்படுத்தப்பட்டது. அதேவேளை, நந்திக்கடல் நீரேரிக்கும், முல்லைப் படைத்தளத்திலுள்ள பழைய இராணுவ முகாமிற்கும் இடைப்பட்ட பகுதியில், ஒரு விமான ஓடுபாதை கட்டப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் ஒரு சிறிய நிலப்பரப்பில் இருந்த இந்த இராணுவ முகாம், பின்னர், படிப்படியாக விரிவாக்கம் பெற்றது. 'இரண்டாம் ஈழப்போரி'ன் ஆரம்பத்துடன் இந்த முகாம் பெருமெடுப்பில் விஸ்தரிக்கப்பட்டு, ஒரு இராணுவத் தளம் ( Military Base ) என்ற, தற்போதைய பாரிய வடிவத்தை எடுத்தது.

தளப்பிராந்தியத்தின் பூகோள அமைப்பு அதன் பாதுகாப்பிற்குப் பெரிதும் துணைநின்றது. பெருங்கடல் - நீரேரி - வெட்டவெளிகள் - சதுப்புநிலங்கள் என்பன, புலிவீரர்களின் ஊடுருவலுக்கு அலலது படைநடாததலுக்குத் தடையாக இருந்தன.


இந்த இயற்கைப் பாதுகாப்புடன் - தளத்தின் பாதுகாப்பை அதிகப்படுத்தும் வகையில் - மேலும் பல தற்காப்பு ஏற்பாடுகளைப படையினர் ஏற்படுத்தினர்.

தளப்பகுதியைச் சுற்றி மண் அணையுடன் கூடிய ஒரு தடுப்புவேலி இடப்பட்டிருந்தது. தளப்பிராந்தியத்தைச் சூழ இருந்த இயற்கைப் பாதுகாப்பிற்கு அடுத்ததாக, படையினர் இட்ட

## 'ஏ - வண்' பாதுகாப்பைக் கொண்டிருந்த முல்லை இராணுவத் தளம், புலிகளின் 'ஏ - வண்' தாக்குதலால் அழித்தொழிக்கப்பட்டுவிட்டது!

முதலாவது சுற்றுப் பாதுகாப்பு ஏற்பாடு அது. இந்தத் தடுப்புவலி சிலிப்பர் கட்டைகள், மண் சாக்குகள், மரக்குற்றிகள் மற்றும் கொங்கிறீட் கற்கள் போன்றவற்றால் அமைக்கப்பட்டிருந்தது. இதவேளை, தளதற்கு வெளிப்புறத்தில் மறைந்தருந்தபடி, தளத்தின் உட்புறத்தில எஃன நடக்கின்றது - என்ன இருக்கின்றது - என்பனதப் புலிகள் கண்டுகொள்ளாதவாறு, தடுப்புவேலி முழுவதும், பனை ஓலைகளாலும் தகரங்களாலும் மறைக்கப்பட்டுக் கிடந்தது.

இந்த வெளிப்புற வேலி அரணிலிருந்து 30 அல்லது 40 மீற்றர் நீளப் பகுதிகளிலுள்ள பற்றைகள் - கட்டடங்கள் அகற்றப்பட்டு, வெட்டவெளியாக வைக்கப்பட்டிருந்தன. வேலி அரணை அண்மிக்க முனையும் எவரையும், காவற் கடமையிலுள்ள படையினர் மிகச் சுலபமாகக் காணும்





www.eelamview.com



மகளிர் படையின் களமுனைத் தளபதிகளுக்கு, தாக்குதல் வழிமுறையைத் தெளிவுபடுத்தும் சிறப்புத் தளபதி விதுசா.

வகையில், அந்த ஏற்பாடு இருந்தது. இந்தப் பகுதி மிதிவெடிகளாலும் 'கிளைமோர்' கண்ணிகளாலும் நிரப்பப்பட்டிருந்தது. சில இடங்களில், நிலத்திலிருந்து அரை அடி உயரத்தில் முட்கம்பிப் பாத்திகளும் அமைக்கப்பட்டுக் கிடந்தன. இது, அனைத்துவகை வாகனங்கள் நுழைவதற்கும் நடந்து செல்லும் முறைகளையும் தடுத்துவிடும்.

பட்டு, அணுக முடியாத அதியுயர் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்தன.

தளப்பிரதேசத்திற்கு இயற்கை கொடுத்த பாதுகாப்புடனும், தளத்திலுள்ள தாம் ஏற்படுத்திய பாதுகாப்பு ஏற்பாடுகளுடனும் மட்டும் படையினர் திருப்தியடையவில்லை. தளத்திற்கு வெளியே -

செய்யப்பட்டிருந்தன. 'ஏ - வன்' ( A - one ) தரத்தில் முல்லைத் தளப் பாதுகாப்பு இருந்ததாக, கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இவ்விதம் அதி உயர் பாதுகாப்பில் இருந்த முல்லைத் தளத்தைப் புலிகள் எப்படித் தாக்கி அழித்தனர்?

இதற்கான விடை, தலைவர் பிரபாகரன் வரைந்த தாக்குதல் திட்டத்திலும் - அதற்கான தந்திரோபாயத்திலுமே இருக்கின்றது; அத்துடன், ஆயிரக்கணக்கான போராளிகளைத் தயார்ப்படுத்தி, சண்டை நிலைமைகளுக்கு ஏற்றாற்போல்

மேலும், புயலை ஒத்த வேகத்துடனும், 'புலி'யை ஒத்த வீரத்துடனும் களமாடிய புலிவீரர்களின் போர்த்திறனிலும் அது புதைந்து கிடக்கின்றது.

18 ஆம் திகதி அதிகாலை, முல்லைத் தளம் மீது - ஒரே சமயத்தில் பல முனைகளிலிருந்தும் - தாக்குதல் தொடுக்கப்பட்டது. எதிரி எதையும் எதிர்பார்க்கவில்லை; இடம் - நாள் - தாக்குதல் பரிமாணம் என்று எதையுமே அவன் எதிர்பார்க்கவில்லை. பலம்வாய்ந்த தனது தற்பாதுகாப்பு நிலைகள் புலிகளால் தகர்த்தெறியப்படும் என்று, படை வட்டாரம் நம்பியிருக்கவில்லை. ஆனால், படையினரைத் திகைப்பில் ஆழ்த்தியபடி அது நடந்துவிட்டது!

தளத்தைப் புலிகள் கைப்பற்றியபோது, இரண்டு 'ஆட்டிலறி' ஏவுகணைகள் உட்பட, பெருந்தொகையான ஆயுதங்களும் வெடிப்பொருட்களும் புலிகளின் கைகளிற்கு வந்தன; 1200 இற்கு மேற்பட்ட படையினர் பலியாகினர்; முல்லைத்தீவு படைத்தளம் அமைந்திருந்த நிலமும் மீட்கப்பட்டுவிட்டது.

படைத்தளத்தை மீண்டும் கைப்பற்றவெனத் தளத்திற்கு அருகே தரையிறக்கப்பட்ட 'கொமாண்டோ' அணியினராலும், முல்லைத் தளத்தை மீண்டும் கைப்பற்ற முடியவில்லை; தரையிறக்கப்பட்ட படையினரும் - ஒட்டுமொத்த அழிவைத் தவிர்ப்பதற்காக - பின்வாங்கிச் சென்றுவிட்டனர். இந்தத் தரையிறக்கச் சண்டையில், சிங்களக் கடற்படையின் பீரங்கிக் கப்பலொன்று மூழ்கடிக்கப்பட்டது; 150 இற்கும் மேற்பட்ட 'கொமாண்டோ'க்களும் பலியாகியுள்ளனர்.

முன்றாம்பிறை வடிவத்தில், நந்திக்கடல் நீரேரி, முல்லைத்தீவு இராணுவத் தளத்தை அரண்செய்துள்ளது. அதன் எஞ்சிய பகுதியைப் பெருங்கடல், போத்தி முடிவைத்திருக்கின்றது.

ஒட்டுமொத்தத்தில், ஆமையின் மேல்ஓடு - கீழ்ஓடு போல, வங்கக்கடலும் - நந்திக்கடல் நீரேரியும் முல்லைப் படைத்தளத்தின் காப்புக் கவசங்கள்.

இந்தத் தடுப்புவேலி எங்கணும் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுக் கிடந்தன; அவை இரவைப் பகலாக்கின. இந்த மின்குமிழ் ஒளியையும் மீறி, படையினருக்கு ஏதாவது சந்தேகம் ஏற்படுமாயின், அதைப் போக்குவதற்கு வசதியாக, சக்திவாய்ந்த 'தேடொளி'கள் ( search light ) வெளி அரண்களில் பொருத்தப்பட்டுக் கிடந்தன.

வெளிப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தாண்டி புலிகள் உள்நுழைந்தாலும், தளத்தின் மையப்பகுதியைச் சென்றடைய விடாது தடுக்கும் வகையில், தளத்தின் உள்ளேயும் பல பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வெளிப்புற தடுப்புவேலிப் பாதுகாப்பு ஏற்பாட்டைப் போல, உள்ளேயும், மூன்று நான்கு வளையங்களாகத் தடுப்பேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதில் ஒரு வளையத்தில், நூற்றுக்கணக்கான வாகனக் கண்ணிகள் புதைக்கப்பட்டிருந்தன. தளத்தின் உள்ளேயே வாகனக் கண்ணிகளைப் புதைக்கும் அளவுக்கு, தளத்தின் பாதுகாப்பு இறுக்கப்பட்டிருந்தது. அத்துடன், தளப்பகுதியில் இருந்த ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு கட்டடமும், படையினரின் காவல் நிலைகளாகவே இருந்தன. இவை தவிர, தளத்தின் மையப்பகுதியில் இருந்த 'ஆட்டிலறி' ஏவுதளமும் பிரதான முகாமின் தலைமை பகுதியும், வெளிமேல் வெளியிடப்

அதாவது தளத்தின் வெளி வேலிக்கு அப்பால் - ரோந்தும் 'சென்றி'களையும் அவதானிப்புக் குழுக்களையும் அனுப்பி, தளத்தின் வெளிப்புறத்தையும் படையினர் சதா கண்காணித்தனர். புலிகளின் வேவுவீரர்களை எல்லைக்கு வெளியே வைத்து அழிக்கும்

18 ஆம் திகதி அதிகாலை, முல்லைத் தளம் மீது - ஒரே சமயத்தில் பல முனைகளிலிருந்தும் - தாக்குதல் தொடுக்கப்பட்டது. எதிரி எதையும் எதிர்பார்க்கவில்லை; இடம் - நாள் - தாக்குதற் பரிமாணம் என்று எதையுமே அவன் எதிர்பார்க்கவில்லை.



தமிழீழப்புலிகள் இருக்கும் வரையில் எமக்குப் பயமில்லை: அவர்கள்பாயும் காத்திருந்தும் படைக்கும் ஜெயமில்லை!
காயப்பட்ட தோழனை சண்டையரங்கிலிருந்து அகற்றும் புலிவீரன்.

திட்டத்தின் செயற்பாட்டு வடிவமே இதுவாகும்.

இத்தளவுக்கு, முல்லைத்தீவுத் தளத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள்

கள முனைத் தளபதிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கிய தலைவர் அவர்களின் நெறிப்படுத்தலும் இருக்கின்றது:

'ஏ - வன்' பாதுகாப்பைக் கொண்டிருந்த முல்லை இராணுவத் தளம், புலிகளின் 'ஏ - வன்' தாக்குதலால் அழித்தொழிக்கப்பட்டுவிட்டது! O



www.eelamview.com

# முல்லைச் சமர்: சிங்கள நாடாளுமன்றில் ரத்வத்தவின் விளக்கம்!



08.08.1996 அன்று, சிறீலங்காவின் நாடாளுமன்றத்தில், பாதுகாப்புப் பிரதியமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த ஆற்றிய உரையின் முக்கிய பகுதிகள்.

**1985** ஆம் ஆண்டு பெரிதாக விஸ்தரிக்கப்பட்ட முல்லைத்தீவுத் தளம், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபதுகளின் ஆரம்பத்தில் நிறுவப்பட்டது. 'ஈழப்போர் - 2' இன் காலப் பகுதியில், புலிகள் இந்தத் தளம்மீது பல தடவைகள் தாக்குதல்கள் தொடுத்தனர். அப்போதெல்லாம், உதவிப் படை வரும்வரை, அங்கிருந்த படையினர் தளத்தைப் பாதுகாத்தனர்.

நிலரீதியாக முல்லைத்தீவுத் தளம் தனிமைப்பட்டுக் கிடந்தது. ஐ. தே. கட்சி அரசாங்கத்தால் இந்தத் தளம் விரிவாக்கப்பட்டுப் பலப்படுத்தப்பட்டது.

இந்த இராணுவத் தளத்தின் தற்போதைய ஆட்பலம் 1,407 ஆகும். இதில் இராணுவம், கடற்படை, பொலிஸ் என்பவை அடங்கும். அத்துடன், நிர்வாக வேலைகளுக்காகவும் மற்றும் சிறுசிறு வேலைகளுக்காகவும் 81 சிவிலியன்களும் வேலைபார்த்தனர். ஆட்களின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| இராணுவம் | 1268 |
| பொலிஸ் | 49 |
| கடற்படை | 09 |
| சிவிலியன்கள் | 81 |

இரண்டு 'பிரிகேட்'கள் தளத்தில் நிலைகொண்டிருந்தன. 'சிங்க ரெஜிமெண்டி'ன் 9 ஆவது படைப்பிரிவும், 'விஜயபாகு ரெஜிமெண்டி'ன் 6 ஆவது படைப்பிரிவுமே அவையாகும்.

ஆடி 18, அதிகாலை சுமார் 1.30 மணியளவில், தளத்தின் வடக்கு மற்றும் தெற்குப் புறங்களில் இருந்த வெளிப்புறப் பாதுகாப்பு அரண்கள் (F. D. L.) தாக்குதலுக்குள்ளாகின. அன்றைய தினம், தளத்தின் பிரதம தளபதி அங்கே இருக்கவில்லை; அதுபோல சிங்க ரெஜிமெண்டின் கொமாண்டரும்' அங்கில்லை. எனவே, விஜயபாகு ரெஜிமெண்டின் கட்டளை அதிகாரியான மேஜர் அலீபா தளத்தின் பொறுப்பை ஏற்கவேண்டியதாயிற்று. தளத்தைப் பாதுகாக்க அவர் நடவடிக்கை எடுத்ததுடன், மேலதிகாரிகளுக்கும் அறிவித்தார்.

சொற்ப நேரத்தில் முப்படைத் தளபதிகளும் தயாரானார்கள்; எதிரிக்கெதிரான ஒரு கூட்டு நடவடிக்கைக்குரிய அறிவுறுத்தல்களை அவர்கள் வழங்கத் தொடங்கினர்.

அதிகாலை சுமார் 2.00 மணியளவில், இராணுவத் தளபதியும் அவரது உயர்நிலை அதிகாரிகளும் தளத்திற்கு உதவும் முன்னேற்பாடுகளைக் கவனிக்கத் தொடங்கினர்.

அதிகாலை 3.00 மணியளவில், வெலிஓயா கொமாண்டர் 'ஆட்டிலறி' குண்டுத் தாக்குதலைத் தொடக்கி, முல்லைத் தளப் படையினருக்கு உதவினார்.

அதேநேரம், வெற்றிலைக்கேணியில் இருந்து, கடற்கலங்களான பராக்கிரமபாகு, ரணசிறியுடன் ரோந்துக்கலம் ஒன்றும் முல்லைத் தளத்திற்கு உதவ விரைந்தன.

இந்தக் கட்டத்தில், தளப் பாதுகாப்பின் முதலாவது வேலி, புலிகளால் தகர்த்தெறியப்பட்டுவிட்டது; அத்துடன், முதலாம் இரண்டாம் வேலிகளுக்கு இடைப்பட்ட பகுதியும், புலிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது.

3.11 மணியளவில், பல வான்கலங்கள் போர்முனைக்கு வந்தன; புலிகள்மீது குண்டு வீசத் தொடங்கின. அதேசமயம், கடற்படையும் கடற்புலிகளும் மோதினர்.

மதுறு ஓயாப் பகுதியில் சில இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவெனத் தரித்து நின்ற விசேட படைப்பிரிவை அனுராதபுரம் கொண்டுசெல்லும்படி, அதிகாலை 4.30 மணிக்கு உத்தரவிடப்பட்டது.

அதிகாலை, 5.30 மணியளவில், முல்லைத்தீவுத் தளத்துடனான தொலைத்தொடர்பு முற்றாக அறுந்தது; தளத்தினுள் இருந்த தொலைத்தொடர்புக் கோபுரம சேதமாக்கப்பட்டதையே இது காட்டியது.

ஆயினும், காலை 7.00 மணியளவில், தளத்தினுள் இருந்த கருவிகளின் துணையுடன் மீண்டும் தொடர்பு ஏற்பட்டது.

7.27 இற்கும் 8.26 இற்கும் இடையில், நான்கு விமானங்கள், புலிகள்மீது தாக்குதலை நடாத்தின. முல்லைத் தளப் படையினருக்கு உதவவென உதவிப் படை அனுப்பும் வகையில் முன்னேற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.



உலங்குவானூர்திகள்மூலம் உதவிப் படையைத் தரையிறக்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

மதுறு ஓயாவில் இருந்து அனுராதபுரம் கொண்டுசெல்லப்பட்ட படையினர், அங்கிருந்து உலங்குவானூர்திகள்மூலம் எடுத்துச்செல்லப்பட்டு, 18 ஆம் திகதி பிறபகல் 2.30 மணியளவில், முல்லைத் தளத்தின் தென்புறத்தில் தரையிறக்கப்பட்டனர். தரையிறக்கத்தின்போது படையினர் பலத்த எதிர்த்தாக்குதலைச் சந்தித்தனர். இதில், 37 படையினர் இறந்தனர்; 60 பேர் காயமடைந்தனர். இதனால, வான்வழித் தரையிறக்கத்திற்கான இரண்டாவது முயற்சியைத் தாமதப்படுத்தவேண்டி வந்துவிட்டது.

ஆயினும், நான்கு மணி நேரம் கழித்து சுமார் 6.30 மணியளவில், இரண்டாவது தொகுதிப் படையினர் உலங்குவானூர்திகள்மூலம் தரையிறக்கப்பட்டனர்.

அன்றைய தினம் (18 ஆம் திகதி) மாலை நடந்த சண்டையில் 400 புலிகள் பலியாகினர் என. புலிகளின் தொடர்புசாதனத்தை ஒட்டுக் கேட்டபோது தெரிந்தது.

தரைப்படையின் நகர்வுக்கு கடற்படை உதவியது 18 ஆம் திகதி இரவு 8.30 மணியளவில், காங்கேசன்துறையிலிருந்து ஒரு 'பற்றாலியன்' படையினரை ஏற்றிக்கொண்டு, கடற்படை முல்லைத்தீவு நோக்கிச் சென்றது. இவர்களைத் தரையிறக்க, கடற்படை பல தடவைகள் முயன்றது; ஆனால், கடும் எதிர்த்தாக்குதல் காரணமாக இது நடைபெறவில்லை.


19 ஆம் திகதியும் பல தரையிறக்க முயற்சிகள் மேறகொள்ளப்பட்டன. அன்று மாலை 4.30 மணியளவில், ஒரு தரையிறக்கத்திற்கு கடற்படை முயற்சித்தது. அப்போது, கடற்புலிகளின் தற்கொலைப் படகுகள், 'ரணவிரு' என்ற எமது பீரங்கக் கப்பலைத் தாக்கின; 36 மாலுமிகளுடன் 'ரணவிரு' கடலில் மூழ்கிவிட்டது. அத்துடன், கடற்கொந்தளிப்புக் காரணமாகத் துருப்புகளின் தரையிறக்கம் மேலும் சிக்கலடைந்தது.

இதேவேளை, உதவிப் படைக்கான மேலதிகப் படையினரைப் பல்வேறு இடங்களிலிருந்து ஒன்றுசேர்க்கும் பணியில், வான்படை விமானங்கள் ஈடுபடடுக்கொண்டிருந்தன. அன்று (19 ஆம் திகதி), இரவும் பகலும் பல தரையிறக்கங்கள் நடந்தன. 3.30 மணியிலிருந்து 6.00 மணிக்குள் நடந்த கடற்சண்டையில், கடற்புலிகளின் படகுகள் பல அழிக்கப்பட்டன.

20 ஆம் திகதி, மேலுமொரு தொகுதிப் படையினர் வான்வழியாகத் தரையிறங்கினர். இந்த முயற்சியின்போது நடந்த சண்டையில், எம். ஐ. - 17 உலங்குவானூர்தி ஒன்று சேதமடைந்தது. தரையிறக்கப்பட்ட துருப்பினரில பலர் காயமடைந்தனர். அன்று மாலையே, காயப்பட்டவர்கள் களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

கடல்மூலமான தரையிறக்கத்திற்குக் கடற்புலிகள் பெருந்தடையாக இருந்தபோது, அவர்களின் படகுகள் மீது வான்படையினர் தாக்குதல்களை நடாத்தி - 80 அல்லது 100 படகுகளை அழித்தனர்.

21 ஆம் திகதி, மேலும் ஒரு தரையிறக்கத்திற்கு கடற்படை முயன்றது. முதல்நாள் வான் தாக்குதலின் விளைவுகள் காரணமாக, கடற்புலிகளின் எதிர்ப்பு மிகவும் குறைந்திருந்தது. இதனால், அன்று மாலை 4.00 மணிக்கு, வெற்றி



தளத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த அதே நிலைகளில் 'ஆட்டிலறி' பீரங்கிகள். இவை தமது படையினரால் சேதமாக்கப்பட்டுவிட்டதாக ஜெனரல் அனுருத்த ரத்வத்த கூறுகின்றபோதும், அவை சேதங்களின்றி முழுமையாகக் கைப்பற்றப்பட்டன.



www.eelamview.com

கரமான தரையிறக்கத்தைக் கடற்படை செய்துமுடித்தது. அன்றைய சண்டையில் 10 இற்கும் மேற்பட்ட கடற்புலிப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன.

23 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு, இரண்டு தரையிறக்கும் கலங்கள் துருப்புகளைத் தரையிறக்கின. அந்தநேரம் புலிகளின் ஒரு மோட்டர் குண்டு, தரையிறக்கும் கலத்திற்குச் சிறு சேதத்தை விளைவித்தது; இதில் 10 படையினர் பலியாகினர், 21 பேர் காயமடைந்தனர்.

பாதுகாப்பான கடற்கரை ( Beach head ) ஒன்றைப் பிடித்துவைத்திருப்பதில் படையினர் வெற்றியீட்டினர்; அங்கிருந்து, முல்லைத்திவுத் தளத்தை நோக்கி நகர முயற்சிகள் எடுத்தனர்.

இதேவேளை, ஏற்கெனவே திட்டமிட்டபடி, கிளிநொச்சி நோக்கிய நகர்வை ஆனையிறவுப் படையினர் ஆரம்பித்தனர். 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் படை நடவடிக்கைக்கு, சத்ஜய எனப் பெயரிட்டோம். 48 மணி நேரத்திற்குள் எமது படையினர், பரந்தனை அடைந்தனர். இந்த இராணுவ நடவடிக்கையில் பங்குகொண்ட படையினரில் விசேட படையினரும் அடங்குவர்; இவர்கள், உதவிப் படையாக முல்லைத்தீவில் தரையிறக்கப்பட்டவர்கள் ஆவர்.

27 ஆம் திகதி, 'சத்ஜய'வின் முதற்கட்டம் - பரந்தனைக் கைப்பற்றியதும் முடிவடைந்தது.

இந்தவேளையில், முல்லைத்தீவுத் தளம் செயலற்றுக் கிடந்தது. இந்தத் தளம் தொடர்பான முடிவு பின்னர் எடுக்கப்படும்.

படைமுகாங்களின் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் விடயத்தில் எத்தகைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று, ஒரு கேள்வி எழுப்பப்படுகின்றது. இதற்கு விரிவாகப் பதிலளிப்பது, படையினரைக் காட்டிக்கொடுப்பதற்கு ஒப்பானதாகிவிடும்.

பொதுவாக, வடக்குக் கிழக்கில் அமைந்துள்ள படைமுகாங்கள், வெளிப்புறப் பாதுகாப்பு வேலிகள் பலவற்றால் அரண் செய்யபட்டு கடும் எச்சரிக்கையுடன் காவல் காக்கப்படுகின்றன; தினசரி பயிற்சிகள் அங்கே நடாத்தப்படுகின்றன; திடீர் அபாயங்களைச் சமாளிப்பதற்கேற்ற திட்டங்கள் கைவசம் வைத்திருக்கப்படுகின்றன. அப்படியென்றால் பிழை எங்கே நடந்தது?

புலிகள் தாக்கப்போகின்றார்கள் என்ற புலனாய்வுச் செய்தி கிடைக்கவில்லையா எனச் சிலர் கேட்கின்றனர்; அல்லது விடுக்கப்பட்ட எச்சரிக்கை அசட்டை செய்யப்பட்டதா எனவும் வினவுகின்றனர்.

புலனாய்வு விடயத்தில் ஒரு குறைபாடு இருந்துள்ளது என்ற சந்தேகம் உள்ளது.

வடக்குக் கிழக்கு முகாங்களைப் பொறுத்தவரை, எப்போதும் தயார்நிலையில் இருத்தல் என்பது கடைப்பிடிக்கப்படுகின்றது. புலிகளின் பலமான பகுதியில் அமைந்திருந்த முல்லைத்தீவுத் தளத்தின் உசார்நிலை, மிகவும் உயர்நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

ஒரு விடயத்தை நாம் அசட்டைசெய்ய முடியாது. புலிகளின் தீவிர கண்காணிப்பு மிகுந்த ஒரு பகுதியில் முல்லைத்திவுத் தளம் அமைந்திருந்தது என்பதே அதுவாகும். தற்கொலைப் படையினர் உட்பட பல்லாயிரம் புலிகள் தாக்குதலில் பங்கேற்றனர். எங்களுடைய வெளிப்புறப் பாதுகாப்பு அரண்களை உடைத்தெறியும நோக்குடன், தற்கொலைப் படையினர் அலை அலையாக வந்து மோதினர்.

முல்லைத்திவுப் படையினரின் கதிபற்றி அறிய நாடே ஆவலாக உள்ளது. எமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில், படையினரின் இழப்பை எண்ணிக்கை ரீதியாகச் சொல்வது கடினமாக உள்ளது.

ஒருவர் களத்தில் கொல்லப்பட்டுவிட்டார் என்பதை அறிவிப்பதற்கு, எங்களுக்கு ஆதாரங்கள் தேவை.

அ) முல்லைத்திவுத் தளத்தில் கொல்லப்பட்ட படையினர் தொடர்பாக எங்களுக்குக் கிடைத்த ஆதாரங்கள் பின்வருமாறு:

18 ஆம் திகதி உலங்குவானூர்திமூலமான தரையிறக்கத்தின்போதும் 23 ஆம திகதி நடந்த தரையிறக்கும் கலம் மூலமான கரையிறக்கத்தின் போதும், உதவிப் படையாகச் சென்றவர்களில் 35 பேர் பலியாகியுள்ளனர்.

தற்கொலைத் தாக்குதலால் மூழ்கடிக்கப்பட்ட 'ரணவிரு'வில் 36 பேர் பலியாகினர்.

ஐ. சி. ஆர். சியினர் வவுனியாவில்வைத்து வழங்கிய சடலங்களில், எமது படையினரால் அடையாளம் காணப்பட்டுப் பெறப்பட்ட உடல்கள் 12.

ஆ) உறுதிப்படுத்தக்கூடிய ஆதாரங்கள் எதுவுமற்ற, ஆனால், களத்தில் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஊகிக்கக்கூடியவர்களின் விபரம் கீழே:

ஐ. சி. ஆர். சியினரால் வவுனியாவில் வைத்துத் தரப்பட்ட சடலங்களில் எமது படையினரின் உடல்கள்தான் இவை என எம்மால் தனித்தனியாக அடையாளம் காண முடியாதிருந்தவை 43.

கிளிநொச்சி அரசாங்க அதிபரிடம் தான் ஒப்படைத்ததாக ஐ. சி. ஆர். சி. உத்தியோகபூர்வமாக அறிவித்த படையினரின் சடலங்கள் 415.

இ) தரையிறக்கப்பட்ட படையினரில் காயப்பட்டோர் 321 பேர்.

இதன் அடிப்படையில் முல்லைத்திவுக் களமுனையில் கொல்லப்பட்ட படையினர் என உறுதிப்படுத்தப்பட்டவர்கள் 83 பேர் மட்டுமே (தளத்தில் 12 பேர்; உதவிப் படையினர் 71பேர்.).

எந்தவித ஆதாரங்களும் எமக்குச் சமர்ப்பிக்கப்படாத நிலையில், கிளிநொச்சி அரசாங்க அதிபரிடம் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட 415 படையினரையும் 'காணாமற்போனோர்' என்ற வகைக்குள்ளேயே அடக்க முடியும்.

முல்லைத் தளத்தின் களநிலைமைபற்றித் தெரியவரும்வரை, தளத்தில் இருந்த மிகுதிப் படையினரும், காணாமற்போனோர் பட்டியலிலேயே சேர்க்கப்படுவர்.

முல்லைத்தீவுத் தளத்தில் இருந்து தப்பி வந்த படையினர் தங்களால் தூக்கிவரக்கூடிய ஆயுதங்களையும் - வெடிப்பொருட்களையும் சுமந்து வந்துள்ளனர். ஆயுதங்களில் சில முல்லைத் தள படையினரால் சேதமாக்கப்பட்டுவிட்டன. அங்கிருந்த இரண்டு 'ஆட்டிலறி'களும் ஏற்கெனவே வைத்திருந்த திட்டத்தின்படி - சேதமாக்கப்பட்டுவிட்டன.



முல்லைத்திவுத் தளம்மீதான புலிகளின் தாக்குதலுக்கு ஒரு முக்கிய காரணி உண்டு.

கிளிநொச்சி நோக்கி படையினர் முன்னேறி வருவர் என்றதொரு பயம் புலிகளிடம் இருந்தது. முல்லைத்திவுந் தளத்தைத் தாக்கி, கிளிநொச்சி நோக்கிய படையினரின் நகர்வைத் தடுக்கப் புலிகள் விரும்பினர்; எனவே, முல்லைத்திவுத் தளமீதான தாக்குதல், புலிகளின் ஒரு திசைதிருப்பல் தந்திரோபாயம் ஆகும்.

ஆனால், புலிகளின் தந்திரோபாயம் தோற்றுவிட்டது என்பது இப்போது புலனாகிவிட்டது. அதாவது, எமது படையினர் இப்போது, கிளிநொச்சி நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றனர்; கிளிநொச்சியிலிருந்து புலிகள், காடுகளுக்குள் தப்பியோடிக்கொண்டிருக்கின்றனர்.

எங்களைப் பொறுத்தவரை, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு முல்லைத்திவுத் தளம் வைத்திருக்கப்படும். அது, கடல் மற்றும் வான்வழி விநியோகங்களில் மட்டும் தங்கியிருக்கின்றது என்பதும் எல்லாருக்கும் தெரியும். அப்படியானால், எமது படையினர் ஏன் அங்கே இருக்க வேண்டும்?

இந்தத் தளத்தின் பணி யாதெனில்...

( i) படையினரின் கடற் போக்குவரத்திற்கு இந்தப் படைத்தளம் பாதுகாப்பளிக்கின்றது.

( ii) இந்தப் பகுதியில், புலிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கின்றது.

(iii) வெளிநாடுகளில் இருந்து புலிகள் ஆயுதங்களைக் கொண்டுவந்து சேர்ப்பதைத் தடுக்கும் பணியையும் செய்கின்றது.

ஏற்கெனவே ஆனையிறவிலிருந்து தெற்கு நோக்கித் தொடக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைமூலம் தரைப்பாதை ஒன்று திறக்கப்படும்போது, முல்லைத்திவு இராணுவத் தளத்தின் முக்கியத்துவம் குறையும்; அதாவது, கடல்வழி விநியோகத்திற்கென முல்லைத்திவுத் தளத்தை வைத்திருப்பது என்பது தேவையற்றுப் போகும்.

இந்தச் சம்பவத்தை ஒரு பாரிய இராணுவ இழப்பாக நாம் கருதவில்லை; மறுபுறத்தில், புலிகளின் தொடர்பு சாதனங்களை ஒட்டுக்கேட்டதன்மூலம், அவர்களில் கொல்லப்பட்டவர்களினதும் காயப்பட்டவர்களினதும் எண்ணிக்கை 1500 ஆகும்; விதாசாரத்தைக் கருத்திலெடுக்கும்போது, இது, புலிகளுக்குப் பாரிய இழப்பாகும்! O

# உண்மை என்ன?

## அனுருத்தவின் அறிக்கை மீது ஒரு நோக்கு

கைதட்டல்கள் - கிரீடம் சூட்டல்களின் துணையுடன் 'ரிவிரச'வின் வெற்றியை, பண்டைக்கால சம்பிரதாயங்களுடன் - நாடாளுமன்றில் - கொண்டாடிய ஜெனரல் ரத்வத்த, கிண்டல்கள் - கேள்விகள் புடைசூழ, முல்லைத்திவுத் தோல்வியை - அதே நாடாளுமன்றில் வைத்து - அறிவிக்கும் 'வலி' மிகுந்த பணியையும் தானே செய்யவேண்டியதாயிற்று!

முல்லைத்திவுப் படையினருக்கு என்ன நடந்தது என்ற கேள்விக்கு விடைகூறும் சாட்டுடன், அப்பெருந்தோல்வியை நியாயப்படுத்தும் வகையில் ரத்வத்தவின் நாடாளுமன்றப் பேச்சு அமைந்திருந்தது.

'நடவடிக்கையில் கொல்லப்படுதல்', 'நடவடிக்கையில் காணாமற்போதல்' என்ற இரண்டு இராணுவ விதிகள் உலக நாடுகள் அனைத்திலும் உண்டு.

இந்த இராணுவ மரபை, படையினரின் உயிரிழப்பை மறைக்கும் ஒரு தந்திரத்திற்காக, ரத்வத்த பிழையாகப் பயன்படுத்தியுள்ளார்.

முல்லைத்திவுத் தளத் தாக்குதலில் 83 படையினர் மட்டுமே பலியானார்கள் என்றும், மிகுதிப்பேர் காணாமல் போனோராகவே கருதப்படுவர் என்றும், அவர் அறிவித்துள்ளார்; அதற்குச் சில சட்ட நியாயங்களும் கூறியுள்ளார்.

ஐ. சி. ஆர். சியினரிடமும் சிறீலங்கா அரசாங்க அதிபர்களிடமும் புலிகள் ஒப்படைத்த 626 படையினரது சடலங்களை, மேற்குறித்த சட்ட நுணுக்கங்களைச் சுட்டிக்காட்டி, ரத்வத்த தட்டிக்கழித்துவிட்டார்!

ஏறக்குறைய 1200 இற்கு மேலான படையினர் கொலலப்பட்டுவிட்டனர் என்ற உண்மையை ஒப்புக்கொள்ளும் திராணி, ஜெனரல் ரத்வத்தவுக்கும் அவரது அரசாங்கத்திற்கும் இல்லை என்பதே உண்மையாகும்.

ஆடி 18 ஆம் திகதி அதிகாலையிலிருந்து முல்லைத்திவுப் படைத்தளத்தின் உள்ளேயும் வெளியேயும் என்ன நடந்தது என்ற விபரத்தை ரத்வத்த அவர்கள் பட்டியலிட்டு, நாடாளுமன்றத்தில் அறிவித்தார்; திகதி - நேரம் - சம்பவம் என்பவற்றை விலாவாரியாகக் குறிப்பிட்டு, படைத்தளத்தைப் பாதுகாக்கத் தாம் எடுத்த நடவடிக்கை பற்றி விளக்கமளித்தார்.

ஆயினும், இந்த விளக்கங்களின் நோக்கம், முல்லைத்தீவில் என்ன நடந்தது என்பதைக் கூறுவதாக இருக்கவில்லை; மாறாக, இந்த இராணுவத் தோல்வியைப் பயன்படுத்தி ஐ. தே. கட்சியினர் அரசியல் இலாபம் ஈட்டிவிடாது தடுக்கும் நோக்குடனேயே, ரத்வத்தவின் விளக்கவுரை அமைந்திருந்தது.

பூநகரி கூட்டுத்தளம் தாக்கப்பட்டபோது அதற்கான எதிர் நடவடிக்கையை எடுக்க, முன்னைய அரசுக்கு 72 மணி நேரம் எடுத்தது என்று ஐ. தே. கவினரைக் குற்றம்சாட்டிய ரத்வத்த அவர்கள், பதில் நடவடிக்கை எடுக்கத் தனக்கு 15 நிமிடங்களே எடுத்தது எனத் 'தம்பட்டம்' அடித்தார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)



www.eelamview.com



# முல்லைப் போரின் கடற்சமரும் திரிவிட பஹரவும்!

“சண்டை தொடங்கி ஒரு மணித்தியாலத்தில திருகோணமலையிலிருந்து வந்து சேர்ந்திடுவான்! கவனம்!”

செல்லும் திட்டம் வகுத்து, வெல்லும உபாயம் வரைந்து, தாக்கும் அணிகளைத் தயார்ப்படுத்தி, வழிப்படுத்தும் தளபதிகளை நியமித்து, ‘வோக்கி’க்கு பற்றரியிலிருந்து 120 மில்லி மீற்றர் ஏவுகுண்டுக்கு ‘பூஸ்ற்ரர்’ வரை ஆயத்தப்படுத்தி, சிற்றுண்டிப் பையிலிருந்து சத்திரசிகிச்சைக்கூடம் வரை ஒழுங்குபடுத்தி, மண்மூடைக்கு சணல்கயிறிலிருந்து ‘சப்ளை வாகனத்’துக்கு உடனடித் திருத்துமிடங்கள் வரை ஏற்பாடு செய்து, எல்லாவற்றையும் பூர்த்தியாக்கிய தலைவர் அவர்கள், நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து முழுமையான தாக்குதற் சமரை நெறிப்படுத்தத் தயாராகின்ற வேளையில் -

முகாமுக்கு உதவி கிடைத்தால் முற்றிலுமே கெடும் என ஏற்கெனவே விரிவாக எடுத்துரைத்துத் தான் விளங்கப்படுத்தியதை, தாக்குதலுக்கு முந்திய கடைசிச் சந்திப்பின்போதும் மீண்டுமொருதரம் வலியுறுத்தி அவர் எச்சரித்தனுப்பியதைப போலவே -

சண்டை தொடங்கிய ஒருமணி நேரத்தில், உதவிக்கு விரைந்த ‘டோரா’க்களை, முல்லைக் கரையிலிருந்து 5 கிலோ மீற்றர் தூரத்திலவைத்து இடைமறித்தனர் புலிகள்!

ஆனால், முல்லைச் சமரின் கடல்வழித் தாக்குதல்களின் ஆரம்பம் அதுவல்ல.

அதற்கு முன்னதாகவே - திட்டவரைவின்படி - படைத்தளத்தின் உள்ளேயிருந்தும் வெளியேயிருந்தும் பல முனைகளில் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட அதே சமதருணத்தில், கரையோரக் காவலரண் வரிசையை உடைத்தெறிந்து, ஊடறுத்து வழியெடுத்து, தரைத் தாக்குதல் அணியொன்றைக் கடல்வழியாக உள்ளே தரையிறக்கும் மயிர்க்கூச்செறியும் அதிரடியொன்றைக் கடற்புலிகள் நிகழ்த்திமுடித்திருந்தனர்.

முடிவில், இராணுவ வரலாற்றில் ஓர் அற்புத சாதனையைப் படைத்ததற்காக அவர்கட்கு மகுடத்தைச் சூட்டிவிட்டபோதும், விடுதலைப் புலிகளின் தரைப்போர்ப் படைவீரர்கள் சந்தித்த மிகப் பெரிய பொருதுகளம முல்லைத்தீவு அல்ல; துல்லியமான வேவு, நுட்பமான திட்டமிடல், கடுமையான பயிற்சி, நேர்த்தியான வழிநடத்தல் என்பன சமரை அவர்கட்குச் சுலபமானதாக ஆக்கிவிட்டன. ஆனால், விடுதலைப் புலிகளின் கடற்போர் வீரர்களுக்கு, தம் வரலாற்றில் அவர்கள் சந்தித்த நீண்ட - ஓய்வற்ற - கீர்த்திமிகு பெரும் போரரங்கு முல்லைத்தீவேதான்.

ஆனையிறவுச் சமரின் முடிவிற்கும், முல்லைத்தீவுச் சமரின் முடிவிற்கும் நேரெதிர் வேறுபாடு.

கடலில் புலிகள் இல்லாததால் அன்று அப்படி நடந்தது: ‘கடலெங்கும’ புலிகள் நிறைந்ததால் இன்று இப்படி நடந்தது.

காலத்தின் விளைவுகளாக, தமிழீழப் போரில் புதிய சுடுகலங்கள் அறிமுகமாகி, புலிகளின் சண்டைத்திறன் இன்னொரு கட்டத்திற்குப் பரிணமிக்கும் மாற்றங்களின் கருவிகளாக இயங்கிய அந்தப் பெரும் பணியில் மட்டுமன்றி, கடற்புலிகளை கடலரங்கில் பொருதுகளங்களைத் திறக்கச் செய்யும் ஒரு போரணியாகவும் யாற்றவேண்டிய வரலாற்றுத் தேவை உணரப்பட்ட ஐந்தாண்டுகளின் பின், இப்போது, கதை இவ்விதமாக மாறிவிட்டது.

‘பராக்கிரம’ என்ற தலைமைக் கப்பலோடு 15 இற்கு மேற்பட்ட கடற்கலங்களை எதிரி களத்தில் இறக்கியிருந்தான். 4 சங்காய் கலங்கள், அதிவேகத் தாக்குதற் படகுகளான 7 ‘டோரா’க்கள், 2 தரையிறக்கும் கலங்கள் என்பவவோடு ‘பேபி டோரா’ வகைச் சண்டைப் படகுகள் சிலவும், அந்தக் கப்பற் தொகுதியில் களமாடின.

திருக்கோணமலைக் கடற்படைத் தளத்திலிருந்து சிங்களக் கடற்படையின் பிரதம தளபதி வைஸ் அட்மிரல் மொகான் சமரசேகரா கண்காணிக்க, முல்லைத்தீவுக்கு மிக அருகேயிருந்த புல்மோட்டைக் கடற்படைத் தளம், கடல் நடவடிக்கைகளைத் தற்காலிகமாக வழிநடாத்தியது.

உந்துவிசை விமானங்களான இஸ்ரேலிய ‘கிபிர்’ போர் ஊர்திகளினதும், சோவியத்தின் ‘எம். ஐ. 24’ யுத்த உலங்குவானூர்திகளினதும், ஆர்ஜென்ரீனாவின் ‘புக்காரா’ தரைத்தாக்குதல் வண்ணூர்திகளினதும் உச்சப் பயன்பாட்டை எதிரி முல்லைக் களத்தில் பிரயோகித்தான். மீட்புப் படைகள் தரையிறங்குவதற்குத் தடையாக தரையிலும் கடலிலும் சண்டையிட்ட புலிகளின் இலக்குகளை, அவை குறிவைத்துத் தாக்கின.

தரைச்சண்டைக் கலங்களைப் போல காப்புத் தடுப்புகளும், கவச அரண்களும், பதுங்கு அகழிகளும் கிடையாத - வெளித்து விரிந்த நீர்ப்பரப்பில் அரங்கேறும் கடற்சண்டைக் களத்தில், வான்படையின் துணையின்றி எதிரியை எதிர்கொள்ளுதென்பது, ஒரு கடற்படைக்கு மிகமிகக் கடினமானதாகும். விமானப்படையின் துணைவலு இணையவேண்டியது கடற்சமர்களின் வெற்றிக்கு இன்றியமையாதது. இந்தப் போரியல் யதார்த்தம், உலகப் போர் வரலாறுகள் பகரும் நடைமுறை உண்மை. சிங்களக் கடற்படைக்கு அந்தப் பக்கபல வாய்ப்பு இருந்தது. ஆனால், எம் கடற்புலிகளோ -

சண்டைகளுக்காகவும், சண்டைப் பயன்பாடுகளுக்காகவுமென்றே வடிவமைக்கப்பட்ட கடற்போர்க் கலங்களில், தரம்மிக்க போராயுதங்கள் பொருத்தி - யுத்த விமானங்கள் புடைசூழப் பொருதுகளத்தைத் திறந்திருந்த பகைவனை, தனித்துநின்று, வெறும் படகுகளில் எதிர்கொண்டனர்.

‘ஓயாத அலைகளி’ன் ஓய்வற்ற சமர்க்களம் இடையறாது நீண்டது. 2900 மீற்றருக்கு விரிந்திருந்த முகாமின் கடற்கரைப் பகுதியிலோ, அல்லது முகாமின் வட எல்லைக்கு அப்பாலும் தென் எல்லைக்கு அப்பாலும ஏறக்குறைய 5 கிலோ மீற்றர் தூரத்திற்குள் ஏதோ ஒரு பகுதியிலோ, மீட்புப் படைகள் தரையிறக்கப்படலாம் என, திட்டமிடலின்போது எதிர்பார்க்கப்பட்டது.

கடல்வழித் தரையிறக்கத்திற்கு எதிரி பல தடவைகள் எத்தனித்தான்: 15 மணித்தியாலங்களாக பல வழிகளில் முயற்சித்தான்.

சண்டையரங்கை அகட்டி, தன் கலங்களைத் தூரத்துக்கொன்றாய்ப் பிரித்து, எம் படகுகளைத் தனித்தனியாகச் சண்டைக்கு இழுத்து, நீள இடைவெளிகளை ஏற்படுத்தி, அவற்றினூடாகக் கரையை நெருங்கப் பகைவன் கையாண்ட கெட்டிக்காரத்தனமான தந்திரோபாயங்களெதுவும் அவனுக்குக் கைகொடுக்கவில்லை.



[களத்தில் பெண் புலிகள்: மீட்க அனுப்பிய படைகளையே மீட்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு, சிங்களம் தள்ளப்பட்டது!



www.eelamview.com




மேஜர் கண்ணபிரான் / அபதுல்லா
சாமித்தம்பி புலேந்திரன்
அம்பாறை.
01.01.1974

அவனெடுத்த பகீரதப் பிரயத்தனங்களெல்லாம் தோல்வியையே தழுவின. கரையிலிருந்து ஏறக்குறைய 4 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் எதிரியைத் தடுத்தது புலிகளின் வியூகம். கடந்து வருவது அவனுக்கு சாத்தியமற்ற காரியமாகவே இருந்தது. தரையிறக்க முயற்சி தடைப்படத் தடைப்பட, தன்னை நெருக்கடி சூழ்வதை எதிரித் தலைமை உணர்ந்தது.

தளத்தின் தொடர்புகள் அறுந்து, களத்தின் நிலைமைகள் புரியாமல், முகாமிலிருந்த தன் 1407 ஆட்களின் உயிர்கள் மீதான 'கேள்விகுறி' பூதாகரமாகி, அங்கிருந்த போராயுதங்கள் கைமாறினால் நிகழக்கூடிய விளைவுகளின் நினைவும் பயங்கரமாகி, செய்வதறியாது குழம்பிய சூழ்நிலையிலும், ஏதாவது செய்தே ஆகவேண்டிய 'நிர்ப்பந்தத்தற்குள்' தள்ளப்பட்ட வேளையில்தான், சிங்களப் படைத் தலைமை அந்த முடிவை எடுத்தது.

அவசியமானதும் ஆனால் அபாயகரமானதும்; எனவே துணிகரமானதும் அதனால் ஆச்சரியகரமானதுமான ஒரு வான்வழிக 'கொமாண்டோ'த் தரையிறக்கத்திற்கு, எதிரி முடிவெடுத்தான்.

18ஆம் திகதியின் மதியம் கழிந்துவிட்ட மணித்துளிகள். காற்று மண்டலத்தை ஏற்கனவே பேரிரைச்சல் நிறைத்திருந்தது. ஏவுகணை எதிர்ப்புக் கருவிகளின் குண்டுகளை வெளிவிட்டவண்ணம 'கிபிர்'கள் விண்ணைக் கிழித்தன; அதே பாதுகாப்புக்கு மேலால 'புக்காரா'க்களும் களத்தில் ஏறியிருந்தன.



மேஜர் பார்த்திபன் / வேதமணி
உலகநாதன் ரமேஸ்
யாழ்ப்பாணம்.
22.02.1977



மேஜர் செல்லப்பிள்ளை
இராமலிங்கம் / செல்வராஜா
மன்னார்.
08.08.1973

மணலாற்றின் 'பராக்கிரமபுர' முகாமிலிருந்த நடுத்தூர 'ஆட்டிலறி' களின் 130 மில்லி மீற்றர் ஏவுகுண்டுகளோடு இணைந்து, புலிகளின் கரையோரக் காப்பரண்களையும் சண்டைப் படகுகளையும் அவை ஒரே வேளையில் குறிவைத்தன. குண்டுகள் இலக்குகளைத் தொடத் தொடங்கிய அதே சம நேரத்தில் -

கரையிலிருந்து 4000 மீற்றர் தொலைவிலிருந்து, தளத்தின் தென் எல்லைக்கு ஏறக்குறைய 1500 மீற்றர் தூரத்திலுள்ள சிலாவத்தையின் கரையோரப் பகுதியை நோக்கி, மீட்புப் படைகள் புறப்பட்டன.

கிடைவரிசையாக நான்கு 'டோரா'க்கள். அவற்றிலிருந்து சில மீற்றர் உயரத்தில் மூன்று எம்.ஐ. 24 யுத்த உலங்குவானூர்திகள். இவற்றின் காப்புக்குப் பின்னால், தரையிறங்கவந்த உதவிப் படையினரைச் சுமந்த ஆறு 'எம்.ஐ.17' துருப்புக்காவி உலங்குவானூர்திகள்.


குழல் வாய்கள் சிவக்க, சுடுகலன்கள் தீ உமிழ, குறிப்பிட்ட கரைப்பகுதியைக் குறிவைத்து

மாரி மழையெனக் குண்டுமழை பொழிந்து - விரைந்து நெருங்கிய எதிரி, புலிகளின் காப்புவியூகத்தை ஊடறுத்து நுழைந்தான்.

கடற்கரை மணற்பரப்பில், 250 மீற்றர் விட்டம் கொண்ட வட்ட வடிவில், 15 அடி உயரத்தில், 'எம்.ஐ.17'கள் சுற்றிச் சுற்றிப் பறந்துகொண்டிருக்க, அவற்றிலிருந்து குதித்துக் குதித்து நிலையெடுத்த சிறப்புக் 'கொமாண்டோ'ப் படையினரைத் தரையிறக்கித் தம் பணியை



மேஜர் சுடரொளி
செபமாலை / இரத்தினமலர்
யாழ்ப்பாணம்.
20.11.1972



மேஜர் பதுமன்
ஆனந்தமயில் பாலமுரளி
யாழ்ப்பாணம்.
18.06.1976


வெற்றிகரமாக நிறைவு செய்த வான்படை, மிக வேகமாகத் திரும்பிச் சென்றது.

நடவடிக்கைக்கு எதிரி 'திரிவிட பஹர' என்று பெயர் சூட்டினான்; 'மும்முனைத் தாக்குதல்' என்பது தமிழர்த்தம்; வானோடு, கடலோடு, தரையிலும் சண்டை ஆரம்பிக்கப்பட்டதால் பொருத்தமான பெயர். உதவிப் படையினர் தரையிறக்கப்பட்டுவிட்டனர் என்ற செய்தி, சிங்கள தேசத்தின் செவிகளில் தேனெனப் பாய்ந்தது! பெரிய எதிர்பார்ப்பு! 'யாப்பாபட்டுன'வை வென்ற ஜெனரல்களே களத்திலிறக்கப்பட்டனர்! அனுருத்தவின் கண்காணிப்பின் கீழ் றொகான் தளுவத்த நெறிப்படுத்த, ஜானக பெரேராவின் துணையோடு சிறிலால் வீரசூரிய வழிநடாத்தினார் என்று சொல்லப்படுகின்றது. ஆதலால், 'ரிவிரச'வைப் போல, 'திரிவிட பஹர'வும் புலிகளைப் பின்னுக்குத் தள்ளும் என்பதில் எவருக்குமே சந்தேகமிருக்கவில்லை! ரத்வத்தவுக்கு அசையாத நம்பிக்கை. ''முழுப் புலிகளும் முல்லைத்தீவில் குவிந்திருப்பதால், அங்கு வைத்தே அவர்களின் கதையை முழுமையாக முடித்து விடலாம்'' என்று ஒரு ஆலோசனையையும் அவர் சொன்னாராம். சொல்லியவர், 'முல்லைப் பட்டுன'விலும் சிங்கக்கொடி நாட்டும் ஆசையோடிருக்க, உலகம் அதிசயித்துக் காத்திருக்க, சிறீலங்கா ஆவலோடு நம்பியிருக்க, தமிழீழம் ஏக்கத்தோடு பார்த்திருக்க -

தொடர்ந்த கதையிலோ -

களத்தில் போராளிகளை வழிநடாத்திக்கொண்டிருந்த ஆற்றல்மிகு தளபதிகளுக்கு உடனுக்குடன் ஆலோசனைகளை வழங்கி, கள நிலைமைகளின் மாற்றங்களுக்கேற்ற விதமாக அறிவுறுத்தல்களைக் கொடுத்து, சமரரங்கைத் தொடர்ச்சியாக நெறிப்படுத்திச்சென்ற தலைவர் பிரபாகரனின் பொருப்பாய வியூகங்களுக்குள் சிக்குப்பட்டதால், இறுதியில, மீட்க அனுப்பிய படைகளையே மீட்டெடுக்கவேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டார் ஜெனரல அனுருத்த.

குறுகிய ஒருதொகைப் படையினரை அதிரடிப்பாணியில் தரையிறக்கிவிட்டால, தொடர்ந்து அதே வழிமூலம், தேவையான மேலதிக துருப்புக்களையும் தளபாடங்களையும கடலூடாக அனுப்பி, மீட்பு அணியை வலுப்படுத்தி, முன்னேறுவதற்கு ஏற்றவாறு பலப்படுத்திவிட்டு



மேஜர் மிதுபாலன்
வேதாரணியம் ஜெயகாந்தன்
யாழ்ப்பாணம்.
28.05.1975


முகாமை நோக்கி நகரவைப்பதே சிங்களத் தலைமையின் மூலோபாயம். திட்டத்தை 'திட்ட வடிவிலேயே' முடங்கச் செய்தனர் புலிகள்! உக்கிர சண்டை! தரையிறக்கப்பட்ட படைக்கு தலைநிமிர முடியாத அடி! கடற்கரை மணலைக் கிளறியெறிந்து பதுங்கிக்கொண்டனர் சிங்கள வீரர்கள்! முல்லை முகாமின் தொடர்ச்சியாக எதிரிக்கு இழப்புக்களின் உறைவிடமாகியது சிலாவத்தை! கண்ணெதிரில் வீழும் சகாக்களின் சடலங்களும், காயப்பட்டுச் சுருண்டோரின் மரண ஓலங்களும் 'சிறப்புப் படை'யினரின் மனவுறுதியைச் சிதைத்தெறிந்தன! உதவிக்குப் போன படைக்கு உதவி தேவைப்பட்டது!; ஆனால், அனுப்ப முடியவில்லை. அது முடியுமானால், மேலதிக படைகளை இறக்கி திட்டத்தை நடைமுறைப்படுத்திப் பார்க்கலாமே? எதுவுமே இயலவில்லை; முனைந்தபோதெல்லாம் மூர்க்கமான எதிர்ப்பைத்தான் சந்திக்கவேண்டியிருந்தது.

கப்பல்கள் கரையை நெருங்க முடியவில்லை; வெடி சுமந்த

படகுகள் பொடியாக்க அலைந்தன. மீறிச் சென்றாலும் கரையில் நிமிடங்களுக்கும் தரிக்க முடியாது; 120 மில்லிமீற்றர் மோட்டர் குழல்வாய்கள் பொறிகக்கக் காத்திருந்தன.

உதவிக்குப் போன படை உபத்திரவமானதாய் மாறியதால், 'திரிவிட பஹர'வைத் தொடங்கிய சிங்களம் 'திரிசங்கு' நிலையில் திகைத்து நின்றது.

'ரணவிரு' - சீனாக்காரன் கொடுத்த பீரங்கிக் கப்பல்;



கப்டன் சயந்தன்
தம்பிப்பிள்ளை துரைரத்தினம்
அம்பாறை.
23.04.1972



www.eelamview.com



ஆனையிறவுச் சமரின் முடிவிற்கும், முல்லைச் சமரின் முடிவிற்கும் இடையில் நேரெதிர் வேறுபாடு. கடலல் புலிகள் இல்லாததால் அன்று அது நடந்தது; 'கடலெங்கும்' புலிகள் நிறைந்ததால் இன்று இது நடந்தது!

'சங்காய் - 3' வகையைச் சேர்ந்தது. சிங்களக் கடற்படையில் அதன் தொடரிலக்கம் 'P.321: 'ரணசுறு'வுக்கும் 'சூரயா'வுக்கும் அது சகோதர முறை.

5.4 மீற்றர் அகலத்தில் 41 மீற்றர் நீண்டிருந்த ஒரு போராயுத மேடை அது.

12.7 மில்லிமீற்றர் 'ஃவிவ்ரி கலிபர்' துப்பாககிகள் 2, 14.5 மில்லிமீற்றர் இரட்டைக் குழல் கனரகத துப்பாக்கிகள் 2, 37 மில்லிமீற்றர் இரட்டைக் குழல் கனரகச் சுடுகலன்கள் 2, 40, மில்லிமீற்றர் தொடர் தன்னியக்க எறிகணை செலுத்தி 1 என்பனவோடு, குறைந்தது 30 படைவிரர்கள் வைத்தருந்த ஏனைய வகைச் சுடுகருவிகளும் அந்தப் பீரங்கிக் கப்பலின் ஆயுத வலிமை.

19 ஆம் திகதி மாலை 4.30 மணி. கடற்கரையிலிருந்து 2 கடல்மையில் தூரம். 'ரணவிரு' குறிவைக்கப்படுகினறது.

போராயுதங்களின் சுடுதிறனால் கப்பலைச் சுறறி எதிரி போட்டிருந்த தடுப்புச் சுவரை உடைத்து நுழைந்தனர் கடற்புலிகள். பாதுகாப்புக்குச் சுற்றிகொண்டிருந்த - 'றொக்கற் மோட்டர்கள்' பொருத்தப்பட்ட - உலங்குவானூர்திகள் விண்ணுக்குயர்ந்தன. சூழ்ந்து நெருஙகிய எம் சண்டைக் கலங்களது ஆவேசத் தாக்குதலில், எதிரியின் சைனியங்கள் தோற்றன.

உச்ச விசையில் அண்மித்தது வெடிகுண்டுப் படகு! அதல கண்ணபிரானும், பார்த்திபனும். சுடுகலன்களை நீட்டிக் குறிவைத்துத் தாக்கினான் பகைவன். கப்பலில் மோத ஐந்து மீற்றர்களே இடைவெளி இருக்கும்போது, இதோ இடித்துவிட்டது என எல்லாரும எதர்பார்தத வேளை, குண்டு மழையில் தோய்ந்து வெடித்துச் சிதறியது படகு! துயரம்! ஆனாலும, சண்டையில் இது தவிர்க்கமுடியாததுதான். வெடியதிர்வில் ஆடிப்போனான் பகைவன்.


எதிரி திகைத்து நின்ற வேளையில், மிதுபாலனதும் இன்னிசையினதும் படகு கப்பலுக்கு மறுகரையால் நெருங்கி நொருங்க இடித்தது! ஆனால், அடுத்த துரதிர்ஷ்டம் .....குண்டு வெடிக்கவில்லை! எம் படகுதான் முன்பக்கத்தால் உடைந்து போனது! நீர் உட்புக ஆரம்பத்தது. இன்னிசையும் சனம் பாய்ந்து காயப்பட்டு விட்டாள்! குண்டு வெடிக்காததன் காரணம் புரியவில்லை! மிதுபாலன் தளரவில்லை; நிதானம் இழககவில்லை. படகைப் பின்னுக்குச் செலுத்தி, கணிசமான தூரததில் வைதது, மீண்டும முன்னோக்கி முயற்சிதது, விசைகூட்டி மூர்க்கமாய் மோதினான்; உடைந்துவிட்ட அணியம் மேலும் உடைந்து போனதேயன்றி, குண்டு வெடிக்கவேயில்லை; தயாரிப்பின்போது ஏற்பட்டிருக்கக்கூடிய தொழில்நுட்பக் கோளாறினால் பிசகிவிட்டது. நீர் புகுந்து கொண்டிருநத படகை, வெகு சிரமத்தோடு பாதுகாப்பாகப் பின்னுக்கு எடுத்தான் அந்த வீரன். அதே சம தருணத்தில், கப்பலின் பின்பக்கமாக வளைந்து, கப்பலின் இயந்திரப் பகுதியை இலக்கு வைத்தது அடுத்த குண்டுப் படகு! அதில் செல்லப்பிள்ளையோடு சுடரொளி. அதிர்ஷ்டம் இம்முறை மாற்றானைக் கைவிட்டுவிட்டது! வழுவாத அடி! இயந்திரப் பகுதி நொருங்கி, சுய கட்டுப்பாட்டை இழந்து, நடுக்கடலில் சுழன்றுகொண்டிருந்த 'ரணவிரு'வை நேரெதிராய்ச் சந்தித்து முகத்திலே அடித்தான் பதுமன்! அந்தோ பரிதாபம்......!

ஏவுகணை தாக்குமென்று அஞ்சிய விமானங்கள் எட்டாத்தொலைவில் செய்வதறியாது அந்தரித்து நிற்க, உதவிக்கு வருகிறது கப்பல் என அவாவோடு காத்திருந்த 'சிறப்புப் படை'யினர் ஏக்க விழிகளால் பார்த்திருக்க, மூழ்கிக்கொண்டிருந்த கப்பலைச் சுறறி வலம்வந்து முழங்கிய கடற்புலி வீரர்களின் துப்பாக்கிகள், சிங்களச் சிப்பாய்களின் தலைகளைக் குறிவைத்தன! 'பண்டாரவன்னியனின் கடல்' சிலிர்த்தது!

'ஓயாத அலைகளி'ன் ஆக்ரோசத்திற்குள் சிக்கித் திணறியது சிங்களம். முகாம் கையிலில்லை; முகாமுக்குப் போனவர்களும் கைபிசையும நிலை! இருந்தவர்களை அழித்தது ஒரு கதை; வந்தவாகளுக்கு அடித்தது இன்னொரு கதை! முல்லைத தளத்தில் கிரீடத்தைச் சூடினர் புலிகள். இராணுவ வல்லுநர்கள் அதிசயிததனர்; அரசியல் நோக்கர்கள் ஆச்சரியப்பட்டனர். ''புலிக்கு எப்படி அடிப்பதென்று எனக்குத் தெரியும்'' என அன்றொரு நாள் திமிர்க்கதை பேசிய ரதவதத, 'புலி எப்படி அடித்ததென்று' புரியாத கையறுநிலையில் கலங்கினார்.

நடக்காதவைகளை நடந்தவையாகவும் நடந்தவைகளை நடக்காதவையாகவும், பிரமாதமாகப் பிரச்சாரப்படுத்தத் தொடங்கியது சிங்களம். பொய்களையே உண்மையின் வடிவமாய்ப் புனைந்து சிங்களம் சொல்லிக்கொண்டிருந்த வேளையில், களம் அவர்களது கைகளிலில்லை.

தரையிறக்கப்பட்ட படை, முகாமை நோக்கி அணுவும் அசைய முடியாமல் அந்தரித்து நின்றது; தம் தளபதி லெப். கேணல் ஹெறாஸ்னி லாபீரையும் நூற்றுக்கு மேலான வீரர்களையும் இழந்து நின்றது; காயப்பட்டு விழ்நத கேணல் லோறன்ஸ் பெர்னாண்டோவையும் ஏனைய சகாக்களையும் என்ன செய்வதெனத் தெரியாது தவிதது நின்றது; மேலதிக துருப்புக்களைத் தரையிறக்க முயற்சித்த ஒரு 'எம். ஐ. 17' உலங்குவானூர்தியும் தரையிறக்கக் கடற்கலம் ஒன்றும் மோட்டர் குண்டுகளால் முழுச்சேதப்பட்டு, களத்திலிருந்து அகற்றப்பட்டுவிட்டன; முன்பு 'ரணவிரு'வைத் தாக்க முடியாமல் திரும்பிய மிதுபாலன், சயந்தனோடு இணைநது மீண்டும் குண்டுப் படகெடுத்து மூழ்கடிக்க நெருங்கும்போது, தற்காப்புத் தாக்குதல் நடாத்தி 40 மீற்றர் தூரத்தில் படகை வெடிக்கச் செய்துவிட்டதால் மயிரிழையில் தப்பிய இன்னொரு தரையிறக்கும் கலம், திருப்பி எடுக்கப்பட்டுவிட்டது; பேரிழப்புக்களுக்கு மத்தியில் நிர்க்கதி நிலையிலிருந்த சிறப்புக் 'கொமாண்டோ'ப் படை, உடனடியாகத் தன்னை மீட்டெடுத்துச் செல்லுமாறு வானொலித் தொடர்புச் சாதனத்தில் அவலமாய் கத்திக்கொண்டிருந்தது!



மூழ்கடிக்கப்பட்ட 'ரணவிரு'வின் வகையைச் சேர்ந்த 'சங்காய் - 3' பீரங்கிக் கடலூர்தி.

ஆனால், சிங்களத் தலைமையோ-

செய்தித் தொடர்புச் சாதனங்களில் வேறுவிதமாகவே சொல்லிக்கொண்டிருந்தது. முதலில், ''முல்லைத் தீவிலிருந்து 10 கிலோமீற்றர் தூரத்தில் தரையிறக்கப்பட்ட படையினர், புலிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் முன்னேறுகின்றனர்'' எனத் தொடங்கி - இடையில், ''புலிகளின் தடுப்புகளை முறியடிக்தபடி வெற்றிகரமாக முன்னேறிய படையினர் முகாமினுள் தேடுதல் நடத்துகின்றனர்'' எனத் தொடர்ந்து - முடிவில், ''முகாமில் தேடுதல் மேற்கொண்டு அங்கு எவருமேயில்லையென்பதைக் கண்டறிந்த பின், மீட்புப் படையினர் அங்கிருந்து வெளியேறிவிட்டனர்'' என முடித்தது!

ஒரு வார காலமாய் ஓய்வற்று அதிர்ந்த 'ஓயாத அலை'க்களம், 'திரிவிட பஹர' துருப்புக்களைத் துரத்திக் கலைத்தபின், அமைதி அடைந்தது.

''துருப்புக்கள் திரும்பிவிட்டனர்'' என்பது சிங்களம் சொல்லிய செய்தி. ஆனால், 'யாப்பாபட்டுன' படையெடுப்பில் பிரதான பங்கேற்ற சிங்களத்தின் புகழ்பூத்த 'சிறப்புப் படை'யினர் எப்படிப் பின்வாங்கினர் என்பது, சொல்லாத செய்தி; அது, சொல்லப்படவேண்டிய செய்தி.

திரும்பிச்செல்லல் அல்ல; அதன் பெயர் தப்பியோட்டம்! நம்மூர்த் தமிழில் ''பிச்சை வேண்டாம் நாயைப் பிடி'' என்ற அவல ஓட்டம்! மோட்டர் பீரங்கிகளின் குறிபிசகாத அடிகளில் குலைநடுங்கிய பீதி ஓட்டம்! 100 வரையான தம் ஆயுதங்களைத் தூக்கிஎறிந்துவிட்டு ஓடிய கேவல ஓட்டம்! படுகாயப்பட்டுக் குற்றுயிராய் மரணத்தின் வாசலில் துடித்துக்கொண்டிருந்த தம் தோழர்கள் பலரை, உயிரோடேயே - கடலில் மூழ்கவிட்டுவிட்டுச் சென்ற அவமான ஓட்டம்! தரையிறக்கும் கலம் கரையை அடையு முன்னரே, கடலில் பாய்ந்து சென்று - தாவிப்பிடித்து ஏறிய அவதி ஓட்டம்!

'ஓயாத அலைகள்' ஒரு முடிந்த கதையல்ல; புதிய கதையின் தொடக்கமே! O



www.eelamview.com



தளபபகுதியில் போராளிகளுடன் - தளபதிகள் சொர்ணம், தீபன் ஆகியோர்.

## உண்மை என்ன?...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், ஜெனரல் ரத்வத்தவும் முப்படைத் தளபதிகளும அவ்வளவு விரைவாக ஒன்று சேர்ந்து - முப்படைகளின் ஆயுத வளங்களையும ஒன்றுதிரட்டி பதில் நடவடிக்கையைத் திட்டமிட்டு வழிநடாத்தியும், முல்லைத்திவுத் தளத்தைப் பாதுகாக்க அவர்களால் இயலவில்லை என்ற இராணுவ யதார்த்தம், ரத்வத்தவின் உரையில் புதைந்து கிடக்கிறது.

''முல்லைத்திவுத் தளம் நிலரீதியாகத் தனிமைப்பட்டுக் கிடந்தது'' என்று, அதன் வீழ்ச்சிக்கு, ரத்வத்த காரணம் ஒன்று கற்பித்துள்ளார்.

முல்லைத்திவு மட்டுமல்ல, எல்லையோரம் தவிர்ந்த வடபுலப் படை முகாங்கள் அனைத்துமே, சிங்கள தேசத்திலிருந்து நிலரீதியாகத் தனிமைப்பட்டே கிடக்கின்றன. குடாநாடாக இருந்தாலுபசரி, மன்னாராக இருந்தாலும்சரி, திவகமாக இருந்தாலும்சரி அவ்விதமே உள்ளன. இந்தப் படைத்தளங்கள் அலலது படை வலயங்களுக்கான தொடர்பு, கடலும் வானும்தான்.

ஆனால், உண்மை யாதெனில், சிங்கள தேசத்தின் தற்போதைய கடற்பலத்தைப் பொறுத்தவரை, அதன் கடற் தொடர்பு என்பது, அதற்கு நிலத்தொடர்பைப் போன்றதே ஆகும். இந்தக் கடற்பலத்தை - கடற் தொடர்பை நம்பித்தான், வடபுலப் படைகளின் இருப்பு தங்கியுள்ளது.

எனவே, முல்லைத் தளம் நிலரீதியாகத் தனிமைப்பட்டுக கிடந்ததால்தான் அதற்கு அந்தக் கதி ஏற்பட்டது என்றவாறு - மறைமுகமாக - தோல்வியை நியாயப்படுத்த முயன்றமை பொருந்தாத ஒரு காரணமாகும். இதுபோன்றே, முல்லைத் தளம் காட்டுக்குள் உள்ளது என்ற ஒரு பொய்யான கருத்தையும், சிங்கள அரசு உருவாக்கியுள்ளது. காட்டிற்குள் புலிகள் பலமாக இருக்கின்றார்கள்; எனவே, புலிகளின் பலமான கோட்டைக்குள் இருந்த அந்தப் படைத்தளத்தைப் புலிகள் தாக்கிவிட்டனர் என்று எண்ணவைப்பதன்மூலம், அந்த இராணுவத் தோல்வியின் பரிமாணத்தைத் திரிக்க முயல்கின்றனர்.

தரையிறக்கங்களின்போது படைத்தரப்பு பட்டபாடு, ரத்வத்தவின் அறிக்கையில் வெளிப்படுகின்றது. கடற்புலிகளின் செயல்திறனை அவர், மறைமுகமாகப் பாராட்டியுள்ளார்; ஆனால், தரையிறக்கத்தின் போது நடந்த சண்டைகளில் புலிகள் இயககத்தற்கு ஏற்பட்ட இழப்புகளை அவர், - வழமைபோலவே - மிகைபபடுத்திக் காட்டியுள்ளார்.

'' 18 ஆம் திகதி மாலை நடந்த சண்டையில் 400 புலிகள் பலியாகினர் '' என்று ஒரு படுபொய்யைக் கூறியுள்ளார். அதுபோல, '' கடற்புலிகளின் 80 அல்லது 100 படகுகள் அழிக்கப்பட்டன'' என்ற கற்பனைக் கணக்கினையும் அந்த அறிக்கையில் காட்டியுள்ளார். தனது கடல் இழப்பைச் சமப்படுத்த, இந்தப் பொய்யை ரத்வத்த கூறவேண்டிவந்துவிட்டது.

' ரணவிரு ' பீரங்கிக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதுடன் தரையிறக்கம் சிக்கலைச் சந்தித்துவிட்டது என்பதை ஒப்புக்கொண்ட ரத்வத்த, '' அத்துடன், கடற் கொந்தளிப்புக் காரணமாக தரையிறக்கம் மேலும் சிக்கலடைந்துவிட்டது'' என்று, காலநிலைப் பொய் ஒன்றையும் உதிர்த்து, தமது இயலாமையை மூடி மறைக்க முயன்றுள்ளார். முல்லைத்திவுக் கடல் இப்போது அமைதியாகவே உள்ளது: தாக்குதல் நாள்களிலும் அமைதியாகவே இருந்தது; மாரிகாலத்தில்தான் இந்தப் பகுதிக் கடல் அலையெறிந்து கொந்தளிக்கும்.

' கடற்புலிகளுடன் இயற்கையும் தரையிறக்கத்திற்குக் குறுக்கே நின்றுவிட்டது; நாம் என்னசெய்ய முடியும்!' என்ற பாணியிலேயே, ரத்வத்தவின் உரை உள்ளது. ஆனால், இயற்கை குறுக்கே நிற்கவில்லை; தரையிலும் கடலிலும், புலிகள்தான் தரையிறக்கத்திற்குக், குறுக்கே நின்றார்கள்!

சிறீலங்கா நாடாளுமன்றில் நீண்ட நேரம் உரையாற்றியபோதும் தரையிறக்கப்பட்ட உதவிப் படை தனது இலக்கை அடையமுடியாது இழப்புகளுடன் பின்வாங்கிச் சென்ற கதையை, ரத்வத்த கூறவில்லை.

ஆயினும் ' மர்மக்கதைப் பாணி'யில், ஒளித்து மறைத்து அந்தப் பின்வாங்கலைக் கூறவேண்டிய நிலையில் அவர் இருந்தார்..

அவர்......

'' 26 ஆம் திகதி ஆனையிறவுப் படைத்தளத்தில் இருந்து தொடங்கிய ' சத்ஜய'வில், முல்லைத்திவுக்கு உதவிப் படையாக அனுப்பப்பட்ட விசேட படையும் பங்குபற்றியது '' என்று, ஒரு சூசக வாக்கியத்தை உதிர்த்தார்; முல்லைத்திவில் தரையிறக்கப்பட்ட விசேட படை எப்படி ஆனையிறவுக்கு வந்தது? ஏன் வந்தது என்ற விபரம், ரத்வத்தவின் உரையில் இல்லை.

தரையிறக்கப்பட்ட படை, 26 ஆம் திகதி, கடல்வழியாக ஒரு அவசரப் பின்வாங்கலைச் செய்தது; அதன்போது, பல ஆயுதங்களையும் வெடிப்பொருட்களையும் போட்டுவிட்டு, 'உயிர்தப்பினால் போதும்' என்று ஓடியமை படைத் தளபதிகளைக் கவலைக்குள்ளாக்கியிருக்கும். இந்த இராணுவ நிகழ்ச்சிபற்றி, ரத்வத்த தனது உரையில் எதுவுமே குறிப்பிடவில்லை.

முல்லைத்திவுத் தோல்வியிலிருந்து சிங்கள மக்களின் கவனத்தைத் திசைதிருப்பிவிடுதல் என்பதே, 'சத்ஜய' இராணுவ நடவடிக்கையின அரசியல் நோக்கமாகும்.

அதேவேளை, ஆனையிறவிலிருந்து ஒரு தரைப்பாதை அமைக்கும் திட்டமும்- அது சாத்தியமோ இல்லையோ ! - அரசிடம் இருந்தது.

கிளிநொச்சியை இலக்காகக்கொண்ட 'சத்ஜய' பரந்தனைவிட்டு நகர முடியவில்லை; ஆனால், ''கிளிநொச்சி நோக்கிப் படையினர் நகர்ந்துகொண்டிருப்பதாக'' நாடாளுமன்றில் ரத்வத்த பொய் கூறியுள்ளார்.

ஆவணி 8 ஆம் திகதி நாடாளுமன்றில் ரத்வத்த உரையாற்றியபோது, பரந்தனில் வைத்துப் படையினர் தடுத்து நிறுத்தப்பட்டு பலநாட்கள் கழிந்துவிட்டன. ஆயினும், ''கிளிநொச்சி நோக்கிப் படையினர் முன்னேறுகின்றனர்'' என ரத்வத்த துணிந்து பொய்கூறினார்.

இந்தப் பொய், கிளிநொச்சி நோக்கிய நகர்வுடன் நின்றுவிடவில்லை; அங்கிருந்து வவுனியாவுடன் ஒரு தரைப்பாதை அமைக்கும் வேலை தொடங்கப்பட்டுவிட்டது போன்றதொரு அபிப்பிராயத்தை உருவாக்கும் அடுத்த பொய்யும் கூறப்பட்டது.

''முல்லைத்திவுத் தளத்தை ஏன் மீண்டும் கைப்பற்றவில்லை ?'' என்ற ஐ. தே. கட்சியினரின் கேள்விக்கு - இந்த அடுக்குப் பொய்களை அடித்தளமாக வைத்து ஒரு காரணமும் கூறப்பட்டது.

''தரைப்பாதை திறக்கப்பட்டால், முல்லைத்தீவுத் தளம் அங்கிருக்கவேண்டிய தேவை இல்லாது போய்விடுகின்றது'' என்பதே அந்தக் காரணமாகும். அதாவது, கடற்பாதைக்கான பாதுகாப்பை முல்லைத் தளம் வழங்கிவந்தது; தரைப்பாதை திறந்தால், கடற்பாதை தேவையில்லை; எனவே, முல்லைத் தளம் தேவையில்லை.

நாடாளுமன்றில் வைத்து, பொய்மேல் பொய்களை ரத்வத்த கூறியது ஆச்சரியப்படவேண்டிய விடயமல்ல; இந்தப் பொய்களைச் சிங்கள மக்கள் அமைதியாகச் செவிமடுத்தார்கள் என்பதே, ஆச்சரியமான விடயமாகும்.

''முல்லைத்திவுச் சம்பவத்தை ஒரு இராணுவ இழப்பாக நாம் கருதவில்லை'' என்ற கருத்தையும், ரத்வத்த கூறினார். இதற்கு ரத்வத்த தெரிவித்த காரணம்...

''இந்தச் சமரில் புலிகள் தரப்பில் கொல்லப்பட்டவர்கள் - காயமடைந்தவர்களது எண்ணிக்கை 1500 ஆகும்; எனவே ( படை ) விகிதாசார அடிப்படையில்,இது புலிகளுக்குப் பாரிய இழப்பு'' என்பதாகும்.

'ஓயாத அலைகள்' இராணுவ நடவடிக்கையில், மொத்தம் 332 புலிவீரர்கள் மட்டுமே வீரச்சாவடைந்துள்ளனர்; சில நூறு பேர் காயமடைந்தனர். ஆனால், புலிகளின் உயிரிழப்பை பலமடங்காக அதிகரித்துக் காட்டி, தமது தோல்வியிலும் ஒரு வெற்றி உள்ளது என்பதுபோலக் காட்ட ரத்வத்த முயற்சித்துள்ளார்.

ஆனாலும், பொய்யான தரவுகளை அடிப்படையாகக்கொண்ட அவரது நியாயப்படுத்தல்கள் அவருக்கே திருப்தி அளிக்கவில்லைப்போலும்! அதனால்தான் அவர், ஒரு போர்த் தத்துவத்தையும் தனது உரையில் சேர்த்துக்கொண்டுள்ளார்.

''சில சமர்கள் தோல்வியிலும் முடியலாம்; சில சமர்கள் வெற்றியிலும் முடியலாம்; இராணுவரீதியில் இவை எதிர்பார்க்கப்பட வேண்டியதே'' என்றார் அவர்.

போர் யதார்த்தத்தை நிதானமாகப் புலப்படுத்த விரும்பும் ஒரு முதிர்ச்சிபெற்ற இராணுவத் தளபதிபோல, ரத்வத்த உரையாற்றியுள்ளார்.

உண்மையில், ரத்வத்த அப்படியானவரா?

'ரிவிரச' சமரை சிங்களப் படை வென்றபின்,

நாடாளுமன்றத்திற்கு உள்ளும் - புறமும் அவர் வெளிபபடுத்திய இராணுவத் திமிர், இந்த யதார்த்தவாதப் பேச்சிற்கு - இந்தப் போர்த் தத்துவத்திற்கு - முற்றிலும் முரணானதாகவல்லவா இருந்தது!

ரத்வத்த ஏற்றுக்கொண்டாலும் சரி ஏற்காதுவிட்டாலும சரி, முல்லைத்தீவில் சிங்களப் படை ஒரு பாரிய உயிர் இழப்பைச் சந்தித்துவிட்டது; அத்துடன் இந்தச் சமரில் சிங்களப் படை இழந்த ஆயுதத் தளபாடங்கள், எதிர்காலத்தில் சிங்களப் படைக்குப் பெரும் அச்சுறுத்தலையும் கொடுக்கப்போகின்றது! O

**நாடாளுமன்றில் வைத்து, பொய்மேல் பொய்களை ரத்வத்த கூறியது ஆச்சரியப்படவேண்டிய விடயமல்ல; இந்தப் பொய்களைச் சிங்கள மக்கள் அமைதியாகச் செவிமடுத்தார்கள் என்பதே, ஆச்சரியமான விடயமாகும்.**



www.eelamview.com

# ‘உண்மை வெற்றி’யை ‘சத்ஜய’வால் அடைய முடியுமா?

வன்னிப் படையெடுப்பிற்காய் வரையப்பட்டிருக்கும் பெரும் போர்த்திட்டத்தின் பிரதான அங்கமாக, அந்த முனை ஏற்கெனவே தயார்ப்படுத்தப்பட்டுத்தான் வந்தது. எனினும், ஆடி 26ஆம் திகதி, ‘சத்ஜய’ அவசர அவசரமாக ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் அதுவல்ல; மாறாக - முல்லைத்தீவில் புலிகள் பெற்றுவிட்ட எண்ணுதற்கரிய வெற்றியையும், தம் மீது சுமத்தப்பட்டுவிட்ட அவமானகரமான தோல்வியையும் ஈடுகட்டிச் சமப்படுத்துவதேயாகும்.

முல்லைத் தோல்வியானது உடனடியாக அடையவேண்டிய இரண்டு இலக்குகளை, சிங்கள அரசுக்கு நிர்ப்பந்தித்திருக்கக்கூடும்.

முதலாவது - மிகவும் உக்கிரமான ஒரு மரபுவழிச் சண்டைக்குப் புலிகளை இழுத்து, பெரியளவிலான உயிரிழப்புகளுக்கு இலக்காக்கி, ‘ரிவிரச’க்களுக்குப் பின்பு மீண்டுமொரு பாரிய போரியல் பின்னடைவை அவர்கட்கு வழங்குவது; இது இராணுவரீதியானது.

அடுத்தது - ஒரு மாவட்டத்தின் (முல்லைத்தீவு) தலைநகரை இழந்து அங்கு பெற்ற பெரும் தோல்விக்குப் பதிலாக, இன்னொரு மாவட்டத்தின் (கிளிநொச்சி) தலைநகரைக் கைப்பற்றிப் புலிகளுக்குப் படுதோல்வியைக் கொடுத்து - உலக நாடுகளிலும், உள்நாட்டிலும் - விழுந்துபோய்க் கிடக்கும் தன் செல்வாக்கை மீளப் புதுப்பிப்பது; இது அரசியல்ரீதியானது.

அத்தோடு - துவண்டுபோய்க் கிடக்கும் தம் மக்களுக்கும் சோர்ந்துபோய்க் கிடக்கும் தம் படையினருக்கும், போர்மூலம் தீர்வு காண்பதில் நம்பிக்கையை வலுப்படுத்தவும், தமிழினத்தை அடிமைகொள்வதற்கான யுத்தத்தின்மீது உள்ள உறுதிப்பாட்டைக் குலையவிடாது பாதுகாக்கவும், ஒரு உடனடி இராணுவ வெற்றியைப் பெற்றுக்காட்டவேண்டிய தேவை, அவசரமாக நிறைவேற்றப்படவேண்டியதாயுமிருந்தது.

இவையெல்லாவற்றுக்கும் ‘சத்ஜய’ கைகொடுக்குமென்று எதிரி நம்பினான். முல்லைத் தளத்திலிருந்தும், வேறுவழிகளாலும் பெற்றெடுத்த ஆயுத கருவிகளால் புலிகள் சற்றுப் பலம் கொண்டிருந்தாலும் கூட, ‘ரிவிரச’வைப் போல ‘சத்ஜய’ மூலமும் புலிகளைப் பின்னுக்குத் தள்ளிவிடலாமென்றுதான் எதிரி ஆரம்பித்தான்.

ஆனால், கிளிநொச்சியையும் சுற்றுவட்டாரத்தையும் நொருங்கடித்ததையும், சூழ்ந்துள்ள கிராமங்களின் குடியிருப்பாளரை அவலமாக விரட்டியதையும் தவிர நடந்தது என்னவெனில், ‘சத்ஜய’வினால் தன் நோக்கத்தில் ‘சத்

**மரபுரீதியான சமர் முறையில் ஈடுபடத்தக்க புதிய போர்வலுவை புலிகள் பெறத் தொடங்கிவிட்டதையே பரந்தன் சமர் காட்டுகின்றது.**

ஜய’வை - ‘உண்மை வெற்றி’யை - இதுவரை அடைய முடியவில்லை என்பதும், எதிரிக்குச் செலுத்த முற்பட்ட பாதகவிளைவுகளைச் சிங்களத் தலைமை இப்போது, தானே சம்பாதித்துக்கொண்டுள்ளது என்பதுமாகும்.

புலிகளின் போரணிகளுள் கணிசமானவை, ஒரு வார காலமாய் ‘ஓயாத அலை’க் களத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ஒரு காலை, ஆனையிறவுத் தளத்தின் தென்பகுதி முன்னணிக் காப்பரண்களிலிருந்து, புகையிரதப் பாதையின் அருகாலே பொருதரங்கத்தைத் திறந்தான் எதிரி.

எதிர்கொண்ட புலிகள் வழிமறித்து மோத, உக்கிர சண்டை வெடித்து - தனது முன்னேற்றத்திற்குச் சிரமத்தைத் தந்தபோது, அந்த முனையில் கடும் தாக்குதலைத் தொடர்ந்த சம நேரத்தில், பிரதான (யாழ்) வீதிக்குக் கிழக்கே 3 கிலோ மீற்றர் தூரத்தில், தன் முன்னணிக் காவலரணிலிருந்து தட்டுவன்கொட்டிப் பகுதியூடு இன்னொரு முன்னேறும் சண்டையை எதிரி ஆரம்பித்தான்.

சொற்ப அளவுடைய போராளிகளே களத்தில் நின்றதால் - வான்படையின் துணையுடன், யுத்த ‘ராங்க்’குகள் சகிதம், கனரக மோட்டர்களின் தாக்குதல்களுடன் நகர்ந்த படையினரால், எதிர்ப்புக்கு மத்தியிலும் பரந்தனை அடைய முடிந்தது.

பரந்தனைக் கைப்பற்ற முடிந்த சுவாரசியத்தில், கிளிநொச்சியைப் பிடிப்பதே தன் நோக்கம் என்பதைப் பகிரங்கமாகவே சொல்லவும் துணிந்தான். அந்த இலக்கை எய்துவதில் ‘சத்ஜய’ துருப்புக்கள் மிக ஆர்வமாகவும் உற்சாகமாகவும் இருப்பதாகவும், தகவல் வெளியீட்டுச் சாதனங்களில் செய்தி சொன்னான். அவ்விதமாக அவன் சொல்லிக்கொண்டிருந்த வேளையில் -


பரந்தனுக்கும் - கரடிப்போக்குச் சந்திக்குமிடையில், எதிரியை வளைத்து நுட்பமான வியூகமிட்ட புலிகள், பகைவனின் அடுத்த கட்டப் படை நகர்விற்காகக் காத்திருந்தனர். அவ்விதமாக அவர்கள் காத்திருந்த வேளை -

ஆவணி - 4 ஆம் திகதி அதிகாலை இருளில், ‘சத்ஜய’ துருப்புக்கள் தமது 2 ஆம் கட்டப் படையெடுப்பு நடவடிக்கையைத் தொடங்கினர், காலையும் மதியமும் மாலையும் தமது நிலைகளிலிருந்து, நான்குக்கும் மேற்பட்ட முனைகளில் முன்னேறிய சிங்களப் படையினர் புலிகளின் வியூகத்தைச் சந்தித்தபோது வெடித்த சமர், அசாதாரணமானது!

பிரதான வீதிக்குக் கிழக்குப் புறமாக முன்னேறியவர்களைப் புலிகள் இரு முனைகளில் தடுத்தடித்தபோது, ஒரு முனையில் 2 ‘ராங்க்’குகள் தாக்கியெரிக்கப்பட, மேலும் ஒன்று சேதப்படுத்தப்பட்டது. மறுமுனையில் ஒரு ‘ராங்க்’ தாக்கியழிக்கப்பட, மேலும் இரண்டு சேதப்படுத்தப்பட்டன.

இதே சமயத்தில் - பிரதான வீதிக்கு மேற்குப் புறமாக முன்னேறியவர்களை, பூநகரி வீதிக்கு வலதுபுறமும், இடதுபுறமும் இரு முனைகளில் எதிர்கொண்ட புலிகள் தடுத்து நிறுத்தினர்.

முதல் நாள் சண்டைகளில் மட்டும் 75 இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். தொடர்ந்து மூன்று நாட்களாக




மூர்க்கத்தனமாக முயற்சித்த எதிரி முறியடிக்கப்பட்ட கடும் சண்டைகளிலும், அதன் பின்பு முன்னேற்ற முயற்சிகளைக் கைவிட்டு - பரந்தன் பகுதியிலேயே தரித்துள்ள படையினரின் முன்னரங்கப் பகுதிகளில் ஏற்பட்ட மோதல்களிலும், மேலும் 75 வரையான படையினர் கொல்லப்பட்டனர். புலிகளின் 85 போராளிகள் இச் சண்டைகளில் வீரச்சாவடைந்தனர்.

பரந்தன் சண்டைகளின் போரியல் பரிமாணம் விரிவானது; வழமையை விட வித்தியாசமானது; ‘ரிவிரச’ச் சண்டைகளை விடவும் உக்கிரமானது என்றுகூடச் சொல்லலாம். எதிரியைப் பொறுத்தவரை, அவன், முன்னெப்போதுமில்லாத வகையில் தனது முழு வலுவையும் செலுத்திய களமாக இதனைக் கொள்ளலாம். மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவின் வழிநடத்தலில், கவசப் படைப் பிரிவுகள், கனரக மோட்டார் படைப்பிரிவுகள், உள்ளிட்ட தரைப் படைப் பிரிவுகள் மிக மிகக் கூடுதலான படைக்கலப்பிரயோகத்தோடு களத்தைத் திறந்தன. ‘ரிவிரச’ வின்போது, பின்களத் தொழிற்பாடுகளிலேயே எதிரியின் வான்படை முழுமையாக இயக்கப்பட்டது: முன்னரங்கச் சண்டைகளில் அதன் மிகமிகக் குறைவான பயன்பாடே பெறப்பட்டது. ஆனால், ‘சத்ஜய’விலோ, விடிந்தால் இருளும் வரை, ஒவ்வொரு நாளும், எதிரியின் எல்லாவகையான தாக்குதல் வானூர்திகளும் களத்தில் நின்றன. நாளாந்தம், இவ்விரண்டாக, ஐந்திற்கு மேற்பட்ட தடவைகள் வந்து தாக்கிவிட்டுப் போன ‘கிபிர்’ வானூர்திகளின் தலைமையில் - ‘புக்காரா’க்களோடு, நெடுங்காலமாக சண்டைகளுக்கு வராமலிருந்த ‘சியா மாசெட்டி’ விமானங்களும் தாக்குதலில் இறங்கின. முழு வளமும் பெற்றிருந்த தரைப்படை, வான்படையின் உறுதுணையுடனேயே முன்னேற முயற்சித்தது.

இந்தவகையில் - ‘சத்ஜய’ இரண்டாம் கட்டத்தைத் தடுத்து முறியடித்த சமரானது, எம் யுத்த வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும். மரபுரீதியான சமர் முறையில் ஈடுபடத்தக்க புதிய போர்வலுவைப் புலிகளின் படை பெற்றுவிட்டதையும், இது தெளிவாக்குகின்றது! ○



www.eelamview.com